# நம் வழி வேளாண்மை

பருவம் 28 ஏப்ரல் – ஜூன் 2018 இதழ் 1




பாரம்பரிய கால்நடை இனப் பாதுகாவலர்களுக்கு பரிசு–2018
நாள் : 22.5.2018 இடம் : கர்னால், ஹரியானா.

## *இயற்கை வழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள் மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை*

// நம்வழி வேளாண்மை

பருவம் 28 ஏப்ரல் – ஜுன் 2018 இதழ் 1

ஆசிரியர்
**பெ. விவேகானந்தன்**

### நம் வழி வேளாண்மை தத்துவம்

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் சேகரித்து வைக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் பலரும் பயன் பெற வழி வகுக்கின்றது.

**நம்வழி வேளாண்மை குழுமம்**
**பிற மொழி இதழ்கள்**

| | |
|---|---|
| ஆங்கிலம் | – தேனீ (Honey Bee) |
| குஜராத்தி | – லோக் சர்வானி |
| ஹிந்தி | – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி |
| ஒரியா | – அமா அகாபகா |
| தெலுங்கு | – பல்லி ஸ்ருஜானா |
| கன்னடம் | – ஹித்தலகிடா |
| மலையாளம் | – இனிகர்ஷகான்சம்சாரிகட்டே |

**நம் வழி வேளாண்மை**
45, டி.பி.எம். நகர்,
விராட்டிபத்து, மதுரை – 625 016.
தொலை பேசி : 0452– 2380082, 2380943.
இமெயில் vivekseva@gmail.com

**ஆங்கில இதழ் முகவரி**

Prof. Anil Gupta,
**Honey Bee,**
Indian Institute of Management,
Vastrapur, Ahmedabad -380 015
email: honeybee@sristi.org
www.nifindia.org ; www.sristi.org

## அஹங்காரம், மமகாரம் இல்லாத அரசர்

யாக்ஞ்யவல்கியர் என்ற குரு மிதிலாபுரிக்கு வெளியே ஒரு ஆசிரமம் அமைத்துக் கொண்டு அங்கே சீடர்களுக்குப் பாடம் சொல்லிக் கொண்டிருந்தார். சீடர்கள் மிதிலையில் வசித்துக் கொண்டு தினமும் குருவின் ஆசிரமத்திற்கு வந்து பாடம் கேட்டு வீடு திரும்புவார்கள். ஜனக மகாராஜாவும் முனிவரிடம் வந்து சீடர்களுடன் உட்கார்ந்து தினமும் பாடம் கேட்டு வந்தார். குரு அரசனுக்கு விசேஷ மரியாதை கொடுப்பதாக சீடர்கள் பொறாமையுடன் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள். இந்த விஷயம் குருவிற்குத் தெரிந்தது.

ஒரு நாள் யாக்ஞ்யவல்கியர் ஜனகருக்கும் மற்ற சீடர்களுக்கும். பாடம் சொல்லிக் கொண்டிருந்த பொழுது திடீரென்று சில ஆட்கள் வந்து ''மிதிலா நகரம் தீப்பற்றி எரிகிறது'' என்று கூறினார்கள். சீடர்கள் எல்லாம் பதறிப்போய் குருவிடம் சொல்லாமல் உடனே எழுந்து தங்கள் வீட்டிற்கு ஓடினார்கள். தங்களுடைய அல்ப உடமைகள் தீக்கிரையாகாமல் காப்பாற்ற வேண்டும் என்பது அவர்களுடைய குறிக்கோள். ஆனால் தன்னுடைய செல்வங்கள் எல்லாம் அங்கு குவிந்திருந்த போதிலும் ஜனகர் இருந்த இடத்தை விட்டு நகரவில்லை. குரு காரணம் கேட்ட பொழுது ஜனகர் கூறினார்: ''மிதிலை தீப்பற்றி எரியும் பொழுது என்னுடையது எதுவும் எரியவில்லை''. நான் என்ற எண்ணம் (அஹங்காரம்) எனது என்ற எண்ணம் (மமகாரம்) இரண்டும் அற்ற பற்றற்ற நிலையில் உள்ள ஜனகருக்கு எதுவுமே அறவே கிடையாது என்பதால் தான் அவர் அமைதியாக இருந்தார். அவர் ஆண்ட ராஜியத்தில் அரச வாழ்க்கை வாழ்ந்தாலும், போகங்கள் அனுபவித்தாலும் அவைகளில் பற்றின்றி பராமாத்மா சிந்தனையில் இருந்து வந்தார்.

நன்றி : மஹரிஷிகள் வரலாறு புத்தகம்

## மயிலாடுதுறை கண்ணனின் எளிய எண்ணெய் பிரித்தெடுக்கும் இயந்திரம்

நாகப்பட்டிணம் மாவட்டம் மயிலாடுதுறை தாலுகா சித்தர்காடு அருகிலுள்ள பனந்தோப்பு தெருவில் வசிப்பவர் திரு. கண்ணன் (வயது 68). இவர் பி.யூ.சி (P.U.C) படித்துள்ளார். இவரது தந்தை எண்ணெய் பிரித்தெடுக்கும் மில் வைத்து இருந்தார். இவரும் அவரது தந்தைக்கு உதவியாக படிக்கும் போதே எண்ணெய் பிரித்தெடுக்கும் தொழிலுக்கு உதவியாக இருப்பார். இவருக்கு இந்த எண்ணெய் பிரித்தெடுக்கும் செக்கை எளிய முறையில் மின் இயந்திரம் மூலம் வடிவமைக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அது போல் அவர் எண்ணெய் பிரித்தெடுக்கும் இயந்திரம் ஒன்றை 1/2 ஹெச்பி. அல்லது 1 ஹெச்.பி மோட்டார் மூலம் இயக்கும் விதமாக வடிவமைத்துள்ளார்.

**குளியல் பிரஸ்**

இவர் எண்ணெய் பிரித்தெடுக்கும் இயந்திரம் வடிவமைப்பதற்கு முன்பாக குளியல் பிரஷ் ஒன்றை வடிவமைத்துள்ளார். இந்த பிரஷ் கையால் இயக்க வல்லது. குளியல் சோப்பை அந்த பிரஸ்ஸில் பொறுத்தி பயன்படுத்த வேண்டும். இந்த பிரஸ்ஸை நீட்டவும் சுறுக்கவும் ஏதுவான முறையில் வடிவமைத்துள்ளார்.

**எண்ணெய் பிரித்தெடுக்கும் இயந்திரம்**

இந்த எண்ணெய் பிரித்தெடுக்கும் இயந்திரம் 1/2 ஹெச்.பி –1ஹெச்.பி மோட்டார் உதவி கொண்டு இயக்கலாம். இந்த இயந்திரத்தில் உள்ள ஒரு சிறப்பு அம்சமானது எண்ணெய் பிரித்தெடுக்கும் போது இயந்திரத்தில் ஏற்படும் வெப்பத்தை தண்ணீர் சுழற்சியாக செலுத்தப்படுவதன் மூலம் குறைக்கிறது. இதனால் எண்ணெய் அதன் உயிர்சத்து அழியாமல் நல்ல எண்ணெயாக நமக்கு கிடைக்கின்றது. இந்த இயந்திரம் 1 கிலோ முதல் 3 கிலோ எண்ணெய் வித்துக்களில் எண்ணெய் எடுக்கலாம். அதிகபட்சம் 10 கிலோ எண்ணெய் வித்துகளை அரைக்கலாம். இந்த இயந்திரம் வீட்டு உபயோகத்திற்கு சிறிய எளிய முறையில் பயன்படுத்தலாம். வியாபார நோக்கிலும் பெரிய இயந்திரமாக வடிவமைக்கலாம். இந்த இயந்திரத்தை மகளிர் குழுக்களுக்கு சுயதொழில் செய்ய ஏதுவாகவும் பயன்படுத்தலாம்.

**தீவனம் தயாரிக்கும் இயந்திரம்**

இவர் இந்த எண்ணெய் பிரித்தெடுக்கும் இயந்திரத்தை சில மாறுதல்கள் செய்து எண்ணெய் பிரித்தெடுக்கும் இயந்திரமாகவும் தீவனம் அறைக்கும் இயந்திரமாகவும் பயன்படுத்துவதற்கு ஏதுவாக வடிவமைத்துள்ளார். இந்த இயந்திரத்தின் மூலம் மாட்டுத் தீவனம், கோழித் தீவனம் அரைக்கலாம். இந்த இயந்திரத்தை வைத்து மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஒன்று சேர்ந்து ஒரு தொழிலாக நன்றாக செயல்படுத்தி வருமானம் ஈட்டலாம் என்று கூறுகிறார்.

கே. கண்ணன்
த/பெ. கோதண்டபாணி
38/94 பன்ந்தோப்பு தெரு, சித்தர்காடு
மயிலாடு துறை– 600003, செல் : 7598333371

## நிலத்தடி நீர் அறிந்து கொள்ளுதல்



கடந்த 23 ஆண்டுகளாக 1000 இடங்களுக்கு மேலாக நிலத்தடி நீரை ஆய்வு செய்துள்ளேன். இதில் 200 இடங்களுக்கு மேலாக கிராம குடி நீர் கிடைக்கும் இடங்களை தேர்வு செய்து கூறியுள்ளேன். நான் ஆய்வு செய்து கூறிய இடங்களில் போர் போடும் இடங்களில் 100க்கு 80 இடங்களில் நல்ல நீர் ஊற்று கிடைத்துள்ளது. நிலத்தடிநீரை ஆய்வு செய்ய ஒரு தேங்காயை உள்ளங்கையில் எடுத்து சோதனை செய்யும் இடத்தில் நடந்து செல்வேன். நிலத்தடி நீர் இருந்தால் தேங்காய் நகரும். நிலத்தடி நீர் இல்லையென்றால் தேங்காய் நகராது. இயற்கையாகவே ஒரு சில நபர்களுக்கு அமைந்துள்ள மனித சக்திக்கும் பூமிக்குள் மறைந்துள்ள நில நீர் ஊற்றுகளுக்கும் ஒரு நெருங்கிய தொடர்பு உண்டு. அதுபோல இயற்கை சக்தி என் உடலிலும் உள்ளது. நான் எனது சக்தியை முறையாக பயன்படுத்தி நிலத்தடி நீர் ஆய்வில் ஈடுபடும் போது என் உள்மனது குறிப்பிடும் இடத்தில் நான் நின்றால் எனது கண்கள் செல்லும் திசையில் நிலத்தடிநீர் ஊற்று நிறைந்து இருந்தால் என் கைகளில் உள்ள பொருள்கள் இயங்கும். இதை அறிவியல் பூர்வமாக ஆய்வு செய்ய முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் அவர்கள் செயற்பொறியாளர், பொதுபணி துறை, நிலநீர் கோட்டம், திருச்சிராபள்ளிக்கு அனுபி வைத்தார். அவர்களும் வந்து எனது முறையை ஆய்வு செய்தனர். ஆய்வு செய்த அறிக்கை 3 ஆண்டுகள் ஆகியும் எனக்கு கிடைக்கவில்லை.

ஆ. கந்தசாமி
உழவன் நில நீர் ஆய்வகம்
நெட்டுக் கொட்டகை, த. முருங்கப்பட்டி அஞ்சல்
துறையூர் வட்டம் , திருச்சி மாவட்டம் – 621012
செல் : 04327–293316

## பார்வதியம்மாளின் கால்நடைகளுக்கான வைத்தியம்

திருவண்ணாமலை மாவட்டம், தட்ராம்பாடி தாலுகா மலைமஞ்சனூர் கிராமத்தில் திருமதி. பார்வதியம்மாள் வசித்து வருகிறார். இவருக்கு (வயது 56). இவர் 8 ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்கு 10 ஏக்கர் நிலம் உள்ளது. 35 ஆண்டுகளாக விவசாயம், கால்நடைகளுக்கான வைத்தியம் செய்து வருகிறார். இவர் 10 நாட்டு மாடு வைத்துள்ளார். மாட்டு சாணத்தை விவசாயத்திற்கு பயன்படுத்தி வருகிறார். கறவை மாடு 2, கன்று 2 உள்ளது. வைத்திய முறை பின்வருமாறு:

**வயிறு உப்பிசத்திற்கு**

வெற்றிலை 11, எலுமிச்சை ஊறுகாய் 5 பாக்கெட், பெருங்காயம் 1 (10 கிராம்) இரண்டையும் வெற்றிலையில் வைத்து மடித்து இரண்டு வேலைக்கு வாய்க்குள் உள்ளே கொடுக்க வேண்டும்.

என். பார்வதி
க/பெ. எம். நடராஜன், மலைமஞ்சனூர்
திருவண்ணாமலை, தட்ராம்பாடிதாலுகா,
திருவண்ணாமலை மாவட்டம் , செல் : 8124474671

## வாராங்கல் மாவட்ட பாரம்பரிய உத்திகள்

ஆந்திர மாநிலத்தில் வாராங்கல் மாவட்டத்தில் கடைபிடிக்கப்படும் உத்திகள் பின்வருமாறு:

**பயறுகளை சேமிப்புகால பூச்சிகளிலிருந்து காத்தல்**

திரு. சந்திரமௌலி என்ற விவசாயி ஒவ்வொரு 10 கிலோ எடையுள்ள பாசிப்பயறுக்கு 500 கிராம் அளவு மஞ்சள் தூளுடன் 500 மி.லி அளவு கடலை எண்ணெய் சேர்த்து விடுகிறார். இதனால் பாசி பயறு சேமிக்கும் போது பூச்சிகள் / புழுக்கள் வந்து பாதிப்பதை தவிர்க்கலாம்.

**கடலை வேர் பூச்சிக்கு**

உலர்ந்த வேப்பங்கொட்டைகளை நன்கு அரைத்து தூளாக்கி கடலைச் செடிக்கு தண்ணீர் பாய்ச்சும் சமயம் ஒவ்வொரு செடிக்கும் வைக்க வேண்டும். இந்த முறையில் வேர் பகுதியை தாக்கும் வேர் பூச்சிகளிலிருந்து பயிரை காப்பாற்றலாம்.

**மிளகாயில் பழ அழுகல் நோய் கட்டுப்படுத்த**

சீத்தாப்பழ இலைகளை சேகரித்து அதனை நன்றாக அரைத்து இலைக் கூழ் போல் எடுத்துக் கொள்ளவும். இந்த அரைத்த விழுதுடன் 50 லிட்டர் சுத்தமான நீரில் கரைத்து இந்த கரைசலை தெளிப்பான் உதவியுடன் மிளகாய் செடி மீது தெளிக்க வேண்டும். இந்த முறையால் மிளகாய் பழம் அழுகல் நோய் கட்டுப்படுத்தப்படுகிறது.

**மிளகாய் செடிகள் வளர்ச்சிக்கு**

சுமார் 1 கிலோ எடையளவு பெருங்காயத்தை தூள் செய்து சுத்தமான துணியில் கட்டவும்.

இந்த பெருங்காயப்பொடி துணிப் பொட்டலத்தை நீர் பாய்ச்சப்படும் வாய்க்கால் முகப்பகுதியில் வைக்க வேண்டும். இந்த பொடி தண்ணீரில் படிப்படியாக கரைந்து மிளகாய் செடிகளுக்கு சென்று அடையும். இதனால் மிளகாய் செடியின் வளர்ச்சி கூடும்.

**மிளகாய் செடியில் பயிர் பாதுகாப்பு**

மிளகாய் செடி வளர்ச்சிக்கு பாதிப்பு ஏற்படுத்தும் பூச்சிகள் வராமல் இருப்பதற்கு மிளகாய் செடி வரிசைகளுக்கு நடுவில் விஷ்ணுகரந்தை எனப்படும் கொட்டை கரந்தை செடியினை விதைத்து பயிர் உண்டாக்க வேண்டும். இதனால் மிளகாய் செடியினை தாக்கும் பூச்சிகள் கனிசமாக குறைந்து விடும்.

**மக்காச்சோளப் பயிரினை கரையான் தாக்குதலிலிருந்து பாதுகாக்க**

சீத்தாப் பழ விதைகளை நன்கு உலர வைத்து அரைத்த தூளினை தண்ணீருடன் சேர்த்து மக்காச்சோளப் பயிரின் அடிப்பாகத்தில் நிலத்தில் ஊற்ற வேண்டும். இதனால் கரையான்கள் கட்டுப்படும்.

**கொமுக்கா சாரய்யாவின் மாட்டு கொம்பு ஒடிந்ததிருக்கு மூலிகை வைத்யம்**

சீந்தல் இலை – கொம்பு உடைந்த பாதிப்புக்கு :

சீந்தல் செடி இலைகளை நன்கு அரைத்து அதனுடன் சிறிதளவு மஞ்சள் பொடியினை சேர்த்து கலந்து கொள்ள வேண்டும். இந்த மருந்து கலவையினை உடைந்த கொம்பு பாதிக்கப்பட்ட பகுதியில் பூசி அதன் மேல் சுத்தமான துணியினை வைத்து சுற்றி விடவும். தினசரி மாலை நேரத்தில் முந்தைய நாள் மருந்துடன் வைக்கப்பட்ட துணியினை எடுத்து விட்டு புதிதாக மருந்து மீண்டும் பூசி துணியால் மூடிக்கட்டவும் . இந்த முறையினால் உடைந்த கொம்பினால் பாதிக்கப்பட்ட பகுதி விரைவில் குணம் அடைந்து விடும்.

**எருமையில் மடி வீக்கத்திற்கு**

சீந்தல் செடி இலையுடன் வெள்ளைப்பூண்டு சேர்த்து நன்றாக அரைத்து விழுதாக எடுத்துக் கொள்ளவும். இதனுடன் சிறிதளவு மஞ்சள் பொடி சேர்த்துக் கொள்ளவும். இந்த கலவையை எருமை மாட்டின் பாதிப்பு ஏற்பட்ட மடி மீது நன்றாக பூச வேண்டும். மருந்து கலவை பூசிய சில மணி நேரத்திலேயே மடி வீக்கம் வெகுவாக குறைந்து விடுகிறது.

**சோர்வான காளைகள் / எருதுகளுக்கு**

எண்ணெய் எடுத்த கடலைப் பிண்ணாக்குடன் சிறிது அளவு வெல்லம் சேர்த்து நன்றாக இடித்து பொடி செய்து கொள்ள வேண்டும். தினசரி 250 கிராம் அளவு இந்த வெல்லம் கலந்த பிண்ணாக்குப் பொடியினை வேலை செய்ய இயலாமல் உள்ள எருதுக்கு மாலை வேளையில் வாய் மூலம் கொடுக்கலாம். இதனால் எருதுக்கு தேவையான உடற்சக்தி கிடைக்கும்.

**கால் நடைகளில் முட்டி வீக்கத்திற்கு**

நொச்சி மரப்பட்டையினை நன்கு பொடி செய்து அரைத்துக் கொண்டு பாதிப்பு ஏற்பட்டுள்ள வீங்கிய முட்டி பாகத்தில் இப்பொடியினை பூசவும். இந்த முறை வைத்தியம் முட்டி வீக்கம் உள்ள கால்நடைகளுக்கு உடனடி நிவாரணம் ஏற்படுகிறது.

**கடலை விதை நேர்த்தி**

பெருங்காயப் பவுடரை தண்ணீருடன் கலந்து நன்றாக கலக்கவும். இந்த பெருங்காயப்பொடி நீர் கரைசலில் கடலை விதைகளை இரவு முழுவதும் ஊற வைக்கவும். அடுத்த நாள் இந்த கடலை விதைகளை நிலத்தில் விதைக்கப் பயன் படுத்தலாம். இந்த முறைபடி பின்பற்ற விதைக்கப்படும் கடலை பயிருக்கு பூச்சியோ புழுவோ தாக்குவதில்லை என்று அனுபவப் பூர்வமாக திரு. சாமய்யா கூறுகிறார்.

## அரிவளூர் அல்லீஸ் பாக்கின் ஒருங்கினைந்த பண்ணை

நாகப்பட்டிணம் மாவட்டம் மயிலாடுதுறை தாலுகா எலந்தங்குடி அருகில் அரிவளூரில் வசிப்பவர் திரு. அல்லீஸ் பாக். இவருக்கு வயது 44 . இவர் வேளாண்மை மற்றும் வணிக மேலாண்மையில் பட்டயப் படிப்பு முடித்துள்ளார். இவருக்கு இரண்டு மகன்கள். இவர் வெளிநாட்டில் ஆஸ்திரேலியாவில் 10 வருடங்கள் ஒருங்கிணைந்த பண்ணையில் மேலாளராக பணியாற்றியுள்ளார். இவர் வெளிநாட்டிலிருந்து சொந்த ஊருக்கு திரும்பியதும் தாம் வெளிநாட்டில் கற்றுக் கொண்ட ஒருங்கிணைந்த பண்ணை அனுபவத்தை அடிப்படையாக கொண்டு தாமும் ஒரு பண்ணை நிறுவ வேண்டும் என்று எண்ணினார். பின்பு நமது ஊரில் பெரும்பாலும் விவசாயிகள் நெல், கரும்பு போன்ற தண்ணீர் அதிகம் தேவைபடும் பயிர்களையே பயிரிடுகின்றனர் என அறிந்தார். இவர் இதிலிருந்து வேறுபட்டு ஒரே இடத்தில் அனைத்து பயிர்களையும் சாகுபடி செய்ய ஏதுவான ஒரு ஒருங்கிணைந்த பண்ணையை அமைத்து மக்களுக்கு எடுத்துக்காட்டாக மாற்றி காண்பிக்க வேண்டும் என எண்ணினார். பின்பு இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் அவர்களிடம் இயற்கை விவசாயம் பற்றிய பயிற்சி எடுத்துக் கொண்டார். பின்பு 2006ம் ஆண்டு ஒரு ஒருங்கிணைந்த பண்ணையை நிறுவி அதன் மூலம் ஒருங்கிணைந்த இயற்கை விவசாயம் பற்றி பயிற்சி விவசாயிகளுக்கு மாணவர்களுக்கு கொடுக்க எண்ணினார். அதன் காரணமாக தமது 10 ஏக்கர் இடத்தில் மாட்டுப்பண்ணை, ஆட்டு பண்ணை, கோழிப்பண்ணை மற்றும் மீன் பண்ணை அமைத்தார். மேலும் விவசாயிகள் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க பயிற்சி நிறுவனத்தையும் Integrated Farm and Organic Research Academy என்ற பெயரில் துவங்கி செயல்படுத்தியுள்ளார். இதன்படி இரண்டு குழுக்களுக்கு பயிற்சியளித்துள்ளார். அதாவது 30 நபர் கொண்ட விவசாயிகள் குழு ஒன்றுக்கும் 30 நபர் கொண்ட மாணவர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது. பின்பு விவசாயிகளிடமிருந்து ஆர்வமின்மை, சூழ்நிலை மாற்றம் நீராதாரம் மாசுபடுதல், போன்ற காரணங்களினால் தனது முயற்சியை கை விட்டு விட்டார். தற்போது இவரிடம் நாட்டு மாட்டு பண்ணையில் உம்பளச்சேரி மாடு, காங்கிரெஜ் மாடு ஆகியன உள்ளன. ஆட்டுப் பண்ணையில் நாட்டு ஆடுகள் உள்ளன. கோழிப் பண்ணையில் நாட்டு கோழி வளர்ப்பு செய்து வருகிறார். மேலும் இரண்டு இடங்களில் பண்ணைகுட்டை அமைத்து மீன் வளர்த்த வருகிறார். மீன் பண்ணையில் கட்லா, ரோகு , மிர்ஹர் போன்ற மீன் வகைகளை வளர்த்து வருகிறார்.

இவரது பண்ணையில் தொழு உரம் தயாரித்து அவற்றை விவசாயத்திற்கு பயன்படுத்தி வருகிறார். மாடு, ஆடு மற்றும் கோழிகளுக்கு தீவனமாக அசோளா வளர்த்து கொடுத்து வருகிறார். மர வகைகளான மஹாகனி, தேக்கு மரங்களும் பழ மர வகைகள், சப்போட்டா, கொய்யா, நெல்லி, மா போன்ற மரங்கள் வைத்துள்ளார். தீவனப்புல் வளர்த்து வருகிறார். தேனீ வளர்ப்பும் செய்து வருகிறார்.

ஏ. அல்லீஸ் பாக்
IFORA
அரிவளூர், எலந்தங்குடி அஞ்சல்
மயிலாடுதுறை தாலுகா
நாகை மாவட்டம்,
செல் : 9443920374

## இல்லம் நிற, வல்லம் நிற திருவிழா

கேரளத்தில் திருச்சூர் பகுதியில் ஆடி அமாவாசைக்கு அடுத்த ஞாயிற்று கிழமை அதிகாலை வாசல் தெளித்து கோலம்போட்டு அதில் குத்து விளக்கு வைப்பர். அதற்கு அருகே புதிதாக அறுவடை செய்யப்பட்ட நெற்கதிரை வீட்டு வேலையாள் வைப்பார். இத்துடன் எட்டுவகையான மர இலைகளையும் (மா, பலா, அத்தி, இத்தி, ஆலமரம், அரசு, நெல்லி, மூங்கில்,) வைப்பார். இதற்காக வீட்டு எஜமானார் வெற்றிலை பாக்குடன் தட்சணை கொடுக்க வேண்டும். பின்னர் குத்துவிளக்கை தலையில் சுமந்து கொண்டு பூஜை செய்யும் அய்யர் பின் செல்ல வேண்டும். இதில் வீட்டில் வைத்து வீட்டில் செல்வம் செழிக்க , நிறைதானியம் என்றும் இருக்க அய்யர் பூஜை செய்வார். படைப்பதற்கு புதிதாக அறுவடை செய்யப்பட்ட நெல்லை குத்தி அரிசி படைக்க வேண்டும். இதைப்படைக்கும் பாத்திரத்தில் பாத்திரத்தைச்சுற்றி முடக்கத்தான் தழையை வைத்து கட்ட வேண்டும். இதனால் புதிதாகப் படைக்கப்படும் அரிசியிலுள்ள தோஷம் விலகுமாம்.

இதற்கு மலையாளத்தில் இல்லம் நிற,(வீடு நிறைக), வல்லம் நிற (மூங்கில் கூடை நிறைக) பத்தாய நிற (தானியக்கிடங்கு நிறைக) என்று கூறுவர். இதனால் வீட்டில் மகாலட்சுமி ( ஸ்ரீ தேவி) தங்குவாள் என நம்புவர்.

திரு. பி.கே. ஹரிஹர் அய்யர்
பளியக்கார மடம், சிட்டிசேரி அஞ்சல்
புதுக்காட், திருச்சூர், கேரளா – 680301
செல் : 9447407976

## ஜார்க்கன்ட் மாநில வைத்தியம்

ஜார்க்கன்ட் மாநிலத்தில் நடைபெற்ற கால்நடை மூலிகை வைத்ய பயிற்சியின் போது பயிற்சியில் கலந்து கொண்டவர்கள் கூறிய பாரம்பரிய வைத்யம் பின்வருமாறு.

### புழு வைத்த புண்ணுக்கு

உன்னித்தழையை (Lantana) அரைத்து மஞ்சள் சேர்த்து தேங்காய் எண்ணெய் அல்லது கடுகு எண்ணெயில் கலந்து பூச வேண்டும்.

### கழிச்சலுக்கு

மூங்கில் தழை, கொய்யா தழை, மாதுளம்பழத்தழை, சேர்த்து அரைத்து உள்ளே தர வேண்டும்.

### மாடு பருவத்திற்கு வர

வெந்தயம் 100 கிராம் ஊற வைத்து அரைத்து 100 கிராம் வெல்லம் சேர்த்து 5 நாட்கள் கொடுத்து வர வேண்டும்.

## மோளையாடு இனப்பெருக்கம் செய்யும் கந்தப்பன்னாடி

ஈரோடு மாவட்டம் கோபி தாலுகா தாழைக்கொம்புப்புதூர், கந்தப்பன்னாடி கடந்த 15 ஆண்டுகளாக மோளையாடு கிடாக்கள் வைத்து இனப்பெருக்கம் செய்து வருகிறார். இவரிடம் 2 கிடாக்கள் உள்ளன. வயதாகிவிட்ட கிடாக்களை விற்றுவிட்டு பின் இளம் கிடாக்களை வாங்கி வந்து பராமரிப்பார். இவரிடமுள்ள கிடாக்களில் சினை போடுவதற்கு பல ஊர்களிலிருந்து பெட்டை ஆடுகளை கொண்டு வருவார்கள். சினைக்கு போட ஆட்டிற்கு ரூ. 50 சேவைக் கட்டணமாக வசூல் செய்கிறார். மாதத்திற்கு 10 ஆடுகளுக்கு குறைவில்லாமல் சினைக்கு போடுகிறார்.

சாதாரணமாக கிடா ஆடுகளை ஆடு வைத்திருப்போர்கள் பராமரிப்பது இல்லை. ஏனெனில் கிடா முரட்டு குணமுள்ளதால் அதனை வசப்படுத்துவது சிரமம். மேய்ச்சல் சமயம் மற்ற பெட்டை ஆடுகளையும் மேயவிடாது. இதனை பெண்கள் பராமரிப்பது எளிதல்ல. இக்காரணங்களால் ஒரு சில நபர்கள்தான் கிடா வளர்ப்பார்கள். இந்த கிடாய்க்கு கடலை கொடி (காய்ந்தது) தீவனம், சீமைப்புல், சூபாபுல், தழை, பட்டுப்புழு செடி தழை, வாழை இலை தீவனமாகக் கொடுக்கிறார். துவரங்குருணை (பொட்டு) ஒரு உலக்கு (200 கிராம்) நித்தமும் வைப்பார். கிடா சுமார் 6 மாதத்தில் தாவ ஆரம்பிக்கும். 11/2 வருட மாத்திலிருந்து 2 வயது வரை தாவ விடுவார். வயதான பின் தாவும் வேகம் குறைந்துவிடுவதால் இதனை விற்றுவிடுவார். எப்பொழுதும் 2 கிடாக்கள் வைத்து பராமரிப்பார். ஒரு நாளைக்கு 2 பெட்டை ஆடுகளுக்கு தாவவிடுவார். 2 க்கு மேல் பெட்டை ஆடுகள் வந்தால் அடுத்த கிடாவை வைத்து தாவவிடுவார். பால் மறந்த கிடா குட்டிகளை சுமார் ரூ. 5500 – 7000 வரை விலையில் வாங்கி வந்து (இந்த கிடாய்க்கு பிறந்த குட்டிகள்) பொலி கிடாவாக வளர்ப்பார். ஆடு கழிந்தால் மஞ்சள் பொடி சீனி நீரில் கலந்து தருவார். பொலி கிடாக்களை கட்டிபோட்டுதான்

வளர்க்கிறார்கள். மேய்க்கும் சமயம் சமாளிப்பது கடினம் என்றும் இதனால் கட்டிபோட்டு வளர்ப்பதாகக் கூறுகின்றனர்.

திரு. கந்தப்பன்னாடி
தாழைக்கொம்புப்புதூர்
கூகலூர் அஞ்சல்
கோபி தாலுகா, ஈரோடு மாவட்டம்

## நூல்மதிப்புரை– பழங்கால இந்தியாவில் வானியல் சிந்தனைகள் (Astronomy in Ancient India)- C. Krishnan Nambudiri - June 2011,Rs. 130

உலகிலேயே முதன் முதலில் 12 ராசிகளையும் ராசிகளின் உருவங்களையும் உருவாக்கியவர்கள் வேத காலத்தில் வாழ்ந்த ரிஷி தீர்காத்மா என்பவர். இராசி சக்கரத்தின் கூட்டு பாகை மையப்பகுதி 360 டிகிரி ஆகும். கிரஹங்களின் நிலைபாடு வைத்து நன்மை தீமைகளை முதலில் ஆராய்ந்தவர்கள் இந்தியர்களே.

**பழங்கால வானியல் நிபுணர்கள்**

வானியல் தத்துவங்களை தெரிந்த முன்னோடிகள் 18 பேர்கள் ஆவார்கள். இவர்கள் மூலமாக வானியல் சிந்தனைகள் வேரூன்றின. சூரியன், பிரம்மா,வியாசர், வசிஸ்டர், அத்ரி, பராசரர், கஸ்யபர், நாரதர், பௌவிசா, சயவனா, யுவணா, பிருகு, செளனகர் போன்றாராவர். நாரதரின் நட்சத்திர வித்யா, வசிஷ்டரின் ஞானவசிஷ்டம், பஞ்சசிந்தான்திகம், ஜோதிஸ்சாஸ்திரா ஆகியன முக்கியமான படைப்புகளாகும். இதில் சில நம்மிடையே இல்லை. வியாசரின் படைப்புகள் மகாபாரதத்திலும், பாகவதப்புராணத்திலும் காணலாம். வியாசரின் காலம் கி.மு. 3200 ஆண்டுகள் ஆகும். நமது இந்திய வல்லுனர்கள் ஜோதிடம் வானியல் தத்துவங்களைச் சேர்த்தே உருவாக்கியுள்ளனர். இதில் கால அளவு பற்றிய குறிப்புகள் உள்ளன.

அதிகப்படியான காலம் பிரம்மாவின் ஆயுளாகும். ($3.1 \times 10^{14}$ வருடங்கள்). மிகச்சிறிய கால அளவு திருதி எனப்படும் 0.00045 வினாடியாகும். பூமியின் நிலைப்பாடு கிரகங்களின் நிலைப்பாடு மற்றும் கிரகஹங்களின் சுழற்சி பாதை முக்கியமானவையாகும்.

தென்துருவ வடதுருவத்தில் வசிப்போர்க்கு 6 மாதகாலம் சூரியன் மறையாமல் தெரியும். பகல்பொழுது 6 மாதமாகும். தேவர்கள் வடதுருவத்திற்கு அருகிலிருப்பதால் (மேரு மலை) தேவர்களின் பகல்பொழுது 6 மாதமாகும். அது போல இரவு பொழுது 6 மாதமாகும். அசுரர்கள் தென் துருவத்திற்கு சமீபத்திலிருப்பதால் பகலும் இரவும் தலா 6 மாதங்களாகும். சூரியன் அஸ்வினி நட்சத்திற்கு வரும் சமயம் (மேஷராசி) பகலும் இரவும் ஒரே அளவாக இருக்கும். இது பூமத்திய ரேகையின் பாதையில் வரும் சமயமாகும். இது மார்ச் மாதம் 21 ஆகும். இதுவே சித்திரை 1 என்று முன்னர் இருந்தது. ஆனால் தற்சமயம் பங்குனி மாதம் 8 ம் நாளே அதாவது 23 நாட்கள் முன்னரே வந்து விடுகிறது. இதனால் வருடத்திற்கு 50 1/4 வினாடி வித்தியாசம் ஏற்படுகிறது. ராசி வட்டத்தில் 23 டிகிரி ஆக வித்தியாசம் உள்ளது. அதாவது பங்குனி 8 க்கும் சித்திரை 1 க்கும் வித்தியாசம் 23 நாட்களாகும். $50\frac{1}{4} \times 1650 = 23$ நாட்கள். அதாவது 1650 வருடங்களுக்கு முன்னர் சித்திரை 1 ஐ எப்படி நிர்ணயத்துள்ளனர் என்பதாக எடுத்துக் கொள்ளலாம். விஞ்ஞான அடிப்படையில் பூமியின் அச்சு துருவ நட்சத்திரத்திலிருந்து விலகிச் செல்வதனால்தான் இந்த வித்தியாசம் என கூறப்படுகிறது. வேதகாலத்தில் கி.மு.3200 ஆண்டுகளுக்கு முன்பு ரிஷபத்தில் (கார்த்திகை நட்சத்திரம்) சூரியன் வரும் சமயம் வருடப்பிறப்பு நடந்ததாக தைத்ரேய சம்ஹிதத்தில் கூறப்பட்டுள்ளது. அதாவது 46 நாட்கள் முன்னரே வந்ததாக உள்ளது.

**சூரிய குடும்பத்தை வைத்து வார நாட்கள் வந்த விவரம்**

இந்தியா உலகிற்குத் தந்த நன்கொடை சூரிய குடும்ப நிலைப்பாட்டை வைத்து வாரநாட்கள் வந்ததெனக் கூறப்படுகிறது. பிரம்மாதான் முதல் வானியல் அறிஞராவார். கிரகஹங்கள் சூரியனைச் சுற்றும் வேகத்தினை அடிப்படையாக கொண்டு கீழ்கண்டவாறு வரிசைப்படுத்தலாம்:

சந்திரன், புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய், வியாழன், சனி. சந்திரன் மிக அதிக வேகமாக சுற்றுகிறது. மெதுவாக சுற்றும் கிரஹம் சனியாகும். நமக்கு சூரியன் சுற்றுவது போன்று தோற்றமளிப்பதால் பூமிக்கு பதில் சூரியனை சேர்க்க வேண்டும். எனவே கீழ்கண்டவாறு எடுத்துக் கொள்ளலாம்.

சந்திரன், புதன், சுக்ரன், சூரியன், செவ்வாய், சனி. ஒவ்வொரு நாளிலும் ஒரு கிரஹம் அதிக பலம் உள்ளதாகக் கூறப்படுகிறது. எந்த கிரகஹம் எந்த நாளில் அதிக பலம் வாய்ந்ததோ அது அந்த நாளின் முதல் ஒரு மணி நேரத்தில் முழு பலம் வாய்ந்ததாகக் கணக்கிட வேண்டும். ஒரு நாளில் 24 மணி நேரங்களில் 24 ஹோரை உண்டு. உதாரணமாக சந்திரன் ஒரு நாளில் முதல் ஒரு மணி நேரத்தில் பலமானதாக எடுத்துக்

கொண்டால் அது திங்கள் கிழமை. அதே நாளில் அடுத்த மணி நேரம் சனியின் ஆதிக்கம் (அதி வேகம் கொண்ட சந்திரனிலிருந்து மிகக் குறைந்த வேகமுடையது சனி), பின்னர் வியாழன் கடைசியில் புதனில் முடிவடையும். இரண்டாவது சுற்றில் சந்திரனிலிருந்து ஆரம்பித்து புதனிலும் 3 வது சுற்றிலும் சந்திரனில் தொடங்கி புதனுடன் முடிவடையும். இங்ஙனம் 21 மணிகள் ஆன பின் 22 வது சந்திரன், 23– சனி, 24 –வியாழன். அடுத்த நாள் செவ்வாயில் துவங்க வேண்டும். இதே போல் கணக்கிட்டால் புதன் அடுத்த நாளின் முதல் 1 மணி நேரம் எனத்துவங்க வேண்டும். இதையே ஆரியபட்டரும் கடைபிடித்து தனது நூலில் விவரித்துள்ளார். ஹோரை என்ற சமஸ்கிருத சொல்லிலிருந்து ஹவர் (hour) ஆங்கிலத்தில் மாறியதாகக் கூறப்படுகிறது. ஒரு ஹோரை என்பது 21/2 நாளிகளாகும். ஒரு நாளைக்கு 60 நாளிகள் (24x 21/2). சந்திரன் பூமியைச்சுற்றி வர 27.32 நாட்களாகும். ஒவ்வொரு நாளும் சந்திரன் நிரந்தரமாக உள்ள நட்சத்திரத்தை கடக்கும்.

**அமாவாசையில் சிரார்த்தம் செய்வதின் விளக்கம்**

சந்திரனனின் முழு பரப்பளவும் தெரியாமல் பூமியிலிருப்பவர்கள் கண்ணிற்கு பாதிக்கும் குறைவாகவே தெரியும். மறுபாதி முற்றிலும் மறைந்தேயிருக்கும். அதாவது கண்களுக்கு புலப்படாது. சந்திரனில் இருப்பவர்களுக்கு ஒரு நாள் என்பது பூமியில் 28 நாட்கள் கொண்டதாகும். அதாவது அமாவாசை வரை நடுப்பகல் பின்னர் பிற்பகல் துவங்கும்.

இறந்தபின் ஆவியானது கண்களுக்குப் புலப்படாத சந்திரனின் மறு பகுதியை அடைகிறது. இதனால்தான் இறந்த பிதுர்களுக்கு அமாவாசை அன்று சிரார்த்தம் பன்னுவது அவர்களுக்கு அன்று நண்பகலாதலால் நாம் தரும் பிரசாதத்தை உண்பர் என்று இந்துக்கள் நம்புகின்றனர்.

சந்திரனில் நீர் இருப்பதை 1500 ஆண்டுகளுக்கு முன்னரே வராஹமிரர் கூறியிருப்பதை இன்று விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

சூரியனுக்கு அடிப்புறத்தில் சந்திரன் வரும் சமயம் சூரியகிரஹனநாளாகும். அதே போல் பூமியின் நிழல் சந்திரனை மறைக்கும் சமயம் சந்திரகிரஹனமாகும். சந்திரகிரஹனம் பௌர்ணமி நாளில் ஏற்படும்.

ராகு விழுங்குவது என்று நம்புவது ஏற்றுக் கொள்ளப்பட்டதல்ல என வராஹமிரா கூறுகிறார்.

**வடதுருவத்தில் 6 மாத காலம் தொடர்ந்து வெயில்**

தேவர்களுக்கு ஒரு வருடமானது 365 x 360 நாட்களாகும். அதாவது உத்தராயணம் பகல்பொழுது, தக்ஷிணாயனம் இரவுப் பொழுது. பூமியின் வட துருவத்திற்கு அருகிலுள்ள மேரு மலையே தேவலோகமாக நம்பப்படுகிறது.இன்றும் வடதுருவத்திலுள்ளவர்களுக்கு அங்கு சூரியன் 6 மாதகாலம் தெரிவது உண்மை. குரு கிரஹத்தில் 1வருடம் நேரம் பூமியில் 12 வருடங்களாகும். பித்ருக்களுக்கு 1 வருடம் என்பது 30 x 365 நாட்களாகும். சந்திரனுக்கு 1 வருடம் என்பது 291/2 x 12 = 354 நாட்களாகும். பிரம்மாவின் 1 நாள்= 864,00,00,000 வருடங்களாகும். அதாவது 864 கோடி வருடங்களாகும். சனிக்கு 1வருடம் என்பது 30 பூமி வருடங்களாகும்.

**அண்டம் உருவாகுவதும் அழிவதும்**

பல லட்சம் ஆண்டுகளாக பூமி, சூரிய குடும்பம், நட்சத்திரங்கள் இருந்து வந்துள்ளன. இவை பிரளய காலத்தில் அழிந்து விடும். அப்பொழுது எதுவுமே இருக்காது. எவ்வளவு காலம் இந்த அண்டம் இருந்ததோ அவ்வளவு காலம் இந்த அண்டம் இல்லாமல் இருக்கும். அழிவதும் தோன்றுவதும் கடலில் அலைகள் எழுவதும் இறங்குவதுமாக இருக்கும். இதனை வியாசர் பகவான் ''த்விபராதா''வருடங்கள் வரை($3.1 \times 10^{14}$வருடங்கள்) இருக்கும் என கூறுகிறார். இயற்கையின் கூற்றுக்களான அஹங்காரம், மஹத், தன்மாத்திரைகள் அனைத்தும் பிரளய காலத்தில் அழிந்து விடும். பூமி (மண், கல்) நீரில் சேர்ந்து விடும். நீர் அக்னியில் சேர்ந்து விடும். அக்னி காற்றில் சேர்ந்து விடும். காற்று ஆகாயத்திலும் இந்திரியங்கள்தன்மாத்திரைகளிலும் தன்மாத்திரைங்கள் அஹங்காரத்திலும் அஹங்காரம் மஹத்திலும் மஹத் அவ்யக்தத்திலும் ஒன்றாய்விடும். சதுர்யுகம் என்பது கிருதாயுகம், திரேதாயுகம், த்வாபராயுகம், கலியுகம் ஆகியனவாகும். ஒவ்வொரு யுகம் ஆரம்பத்திலும் சூரிய குடும்பத்திலுள்ள எல்லா கிரகங்களும் ஒரே ராசியில் வரும். அதாவது மேஷத்தில் சூரியனும் மற்ற கிரகங்களும் வந்துவிடும். ஒவ்வொரு 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை வியாழனின் வருடப்பிறப்பும் பூமியின் வருடப்பிறப்பும் ஒன்றாக வரும் நாளாகும்.

கலியுகம் பிறந்தது கி.மு. 3102 வது வருடமாகும். அதாவது கி.மு. 3102 ஆண்டு பிப்ரவரி மாதம் 18 ம் தேதி 2 மணி 27 நிமிடங்களுக்கு 30 வினாடியில் பிறந்தது. அன்று சனி, வியாழன், சுக்கிரன் சூரியன் எல்லாம் ஒரே நேர் கோட்டில் வந்தன. இதையே பிரான்சு நாட்டு வானிலை வல்லூநர்களும் மேற்கண்ட கிரகங்கள் ஒரே ராசியில் இருந்ததைக் கூறுகின்றனர்.

**புத்தகம் கிடைக்கும் இடம் :**

Astronomy in Ancient India
Ganga books, S.M. Street, Calicut - 673001, Kerala, Ph - 0495-6521262

## மண் புழுக்களை விட கரையான்களே நன்மை செய்கிறது

நான் விழுப்புரம் மாவட்டம், கெங்கவரம் கிராமத்தில் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு வயது 83. எனக்கு 2 ஏக்கர் கிணற்று பாசன தோட்டம் உள்ளது. கடந்த 30 வருடங்களாக இயற்கை விவசாயம் செய்து வருகிறேன். என் அனுபவத்தில் மண் புழுக்களை விட கரையான்களினால் தான் அதிக நன்மை ஏற்படுகிறது என்று தெரிகிறது. மண் புழுக்கள் 6 அடி வரைதான் பூமிக்குள் சென்று வரும் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். அதுவும் ஈரம் இருந்தால் தான் வேலை செய்யும். கரையான்கள் 100 அடி வரை பூமிக்குள் சென்று வரும் என்கிறார்கள். வறட்சியிலும் வேலை செய்யும். காற்றில் 80 சதவீதம் தழைசத்து உள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். 100 அடி ஆழம் வரை காற்று உட்செல்லுவதால் காற்றில் உள்ள தழைசத்தை நுண்ணுயிர்கள் கிரகித்து பூமிக்கு வளம் சேர்க்கிறது. காடுகளில் மண்புழுக்கள் அதிகம் வேலை செய்து வளம் சேர்ப்பதாக தெரியவில்லை. கரையான்கள் காய்ந்த குச்சிகள், மரப்பட்டைகள், காய்ந்த இலைகளை அரித்து (உணவாக உண்டு) கரையான் புற்றுகள் உண்டாகிறது. ஈரம் உள்ள இடங்களில் தான் மண் புழு வளரும். இந்த கரையான் புற்றுகள் மழை காலங்களில் தண்ணீரை சேமித்து வைத்து கொஞ்சம் கொஞ்சமாக வெளி விடுகிறது. மழை காலம் முடிந்தவுடன் நீர் ஊற்றாக வெளிப்படுகிறது. நமது இந்து சமயம் மண் புழுக்களுக்கு அதிக மதிப்பு கொடுப்பதாக தெரிய வில்லை. கரையான் புற்றுக்களை தான் தெய்வமாக வணங்கி வருகிறார்கள் எனவே மண் புழுக்களை விட கரையான்கள் அதிக நன்மை செய்வதாக உணர்கிறேன். எனது 30 வருட இயற்கை விவசாயத்தில் எனது தோட்டத்தில் மண் புழு அதிகம் உண்டானதாக தெரிய வில்லை. கரையான்கள் தான் காய்ந்த இலை, குச்சிகளை அரித்து மண்ணுக்கு வளம் சேர்க்கிறது. செயற்கை உரம், பூச்சி கொல்லி மருந்துகளை பயன்படுத்தாமல் இருப்பதால் எறும்பு முதல் எல்லா ஜீவ ராசிகளும் வாழும் இடமாக மாறுகிறது. தோப்பாக இருப்பதால் நிழல் உண்டாகி நுண்ணுயிர்கள் வாழும் இடமாக மாறுகிறது. நுண்ணுயிர்கள் சிதைந்து நிலத்திற்கு வளம் சேர்க்கிறது. ஐப்பானிய இயற்கை விஞ்ஞானி புக்காகோவும் ‘‘ஒற்றை வைக்கோல் புரட்சியில்’’ என்ற நூலில் மண் புழுக்களை பற்றி ஒன்றும் எழுத வில்லை. கனரக வாகனங்களை கொண்டு நிலம் உழுவதால் ஒரு மட்டத்தில் மண் கெட்டி தன்மை அடைந்து மழை நீர் மண்ணுக்குள் ஊடுருவ முடியாமல் போகிறது. மழை நீர் ஊடுருவ முடியாமல் போவதால் கிணற்றுக்களில் நீர் மட்டம் உயருவதற்கு வழி இல்லாமல் போகிறது. குஜராத்தி இயற்கை விவசாயி பால்கர் சாவேயும் நிலத்தை உழாமல் பயிர் செய்வதால் நிலத்தின் வளம் கூடி, நீர் தேவை மிகவும் குறைவதாகக் கூறியுள்ளார். நுண்ணுயிர்களுக்கும் உரம் இட சொல்கிறார். செய்திதாளில் நான் அறிந்த செய்தி: வட நாட்டில் பொட்டலாக இருந்த ஒரு இடத்தில் மரம், செடி, கொடி வைத்து பராமரித்து வந்த சமயம் நிலம் வளம் அடைய வில்லை என்றும் எறும்புகளை பிடித்து அங்கு விட்ட பின் அது பூமியை துளைத்து காற்றோட்டம் ஏற்படுத்தி சோலைவனமாக மாறியதாகவும் படித்தேன். என் அனுபவத்திலும் அது உண்மை தான் என்பதை உணர்கிறேன். எறும்புகளுக்கு உணவு அளிக்க நம் முன்னோர்கள் பச்சரிசி மாவினால் கோலம் இட்டார்கள். நிலத்தை உழுவதால் நிலத்தின் அடிப்படை தன்மை மாறுவதாகவும் கூறுகிறார்கள்.

புற்று மண்ணை ஊற வைத்து மூட்டு வலிக்கு பூசுவதால் மூட்டு வலி குறைகிறது. உடம்பில் பூசி குளிப்பதால் தோல் புத்துணர்ச்சி தெரிகிறது.

### மூடாக்கு இடுவதால் ஏற்படும் நன்மைகள்

மரங்களை சுற்றிலும் தோட்டத்தில் வளர்ந்த தழை செடிகளையும், மரம் கவாத்து செய்த இலைகளையும் மூடாக்கு இடுகிறேன். மூடாக்கு இடுவதால் அதன் கீழே நுண்ணுயிர்கள் பல பெருகி மடிந்து நிலத்திற்கு வளம் கூட்டுகிறது. மழை பெய்யும் சமயங்களில் மழை நீர் நேரடியாக மண்ணில் விழாமல் மரங்களின் மேல் விழுந்து, தடுத்து அதன் பின் மூடாக்கின் மேல் விழுந்து கட்டுப்படுத்தி ஈரம் நீண்ட நாட்களுக்கு பாதுகாக்கப்படுகிறது. உழாமல் இருப்பதால் பறவைகள் இடும் எச்சங்களினால் பல விதமான மூலிகை செடிகளும் உண்டாகிறது. பயிர்களுக்கு களை வெட்டுவதும் காற்றோட்டம் உண்டாக்க தான் தோட்டத்தை சுற்றி உயிர் வேலி பராமரித்து வந்தாலும் நன்மை செய்யும் பூச்சிகள் அதில் இருந்து கொண்டு தீமை செய்யும் பூச்சிகளை கட்டுக்குள் வைத்து கொள்ள உதவிகிறது. மூடாக்கு இட்ட இடத்தில் ஒரு வருடம் மூடாக்கை அகற்றாமல் (செடி, கொடி, தழைகள்) வைத்திருந்தால் அதன் அடியில் நுண்ணுயிர்கள் பெருகி

கெட்டி தன்மை மாறி மண் எருவாக மாறிவிடுகிறது. இது எனது அனுபவத்தில் கண்ட உண்மை. மரங்களுக்கும் செடி, கொடிகளுக்கும் கவாத்து செய்து காற்றோட்டம் ஏற்படுத்தினால் தாவரங்கள் நல்ல பலன் தருவதாக கருதுகிறேன். காகம், மைனா, குருவி, சிட்டுகுருவி, பட்டாம்பூச்சிகள், ஓணான், அணில், மரங்கொத்தி போன்ற சிற்றுயிர்கள் சுதந்திரமாக செயல்பட்டு பயிர்களுக்கு தீமை செய்யும் பூச்சிகளை உணவாக உட்கொண்டு விவசாயிகளுக்கு நன்மை செய்கிறது. கரையான் புற்றிலிருந்து புது மழை பெய்தயுடன் வெளி வரும் ஈசல்களை (வளர்ந்த இறக்கை உள்ளது) கிராமங்களில் உள்ள மக்கள் இரவு வேலையில் வெளிச்சத்தை வைத்து பிடித்து காய வைத்து வறுத்து உண்கிறார்கள். பசு நெய் போல் ஈசல்களில் சேமித்து உள்ள எண்ணெய் பசை உடம்புக்கு ஆரோக்கியம் தருவதாக உள்ளது. (இரசாயன விவசாயத்திற்கு முன்) மானவாரி புன் செய் நிலங்களில் கொடி வேர்கடலை பயிரிடுவார்கள். அது அறுவடை முடிந்தவுடன் நிலத்தை தரிசாக விட்டு விடுவார்கள். மறு வருடம் சித்திரை மாதம் புது மழை பெய்தவுடன் பாமர மக்கள் களை கொத்துவான் மூலம் அந்த நிலத்தில் கொத்தி (தப்பிய மணிலா) பொறுக்குவார்கள். அந்த நிலக்கடலையின் மேல் தோல் கரையான்களால் அரிக்க பட்டு இருக்கும். அந்த நிலக்கடலை பருப்பை சாப்பிடும் போது மிகவும் ருசியாக இருக்கும். தற்சமயம் செயற்கை உரம் இட்டு (இரசாயன உரம்) பூச்சி கொல்லிகள் தெளிப்பதால் அந்த நிலத்தில் இருந்த கரையான்கள் மடிந்து விட்டன. அந்த நிலத்தில் நுண்ணுயிர்கள் மடிந்து விட்டதால் கரையான்களும் மடிந்து விட்டன. நீர் பிடிப்பு தன்மை குறைந்து வறட்சி சமயம் இரவு வேலையில் கிடைக்கும் குளிர்ச்சியான காற்றில் உள்ள ஈரப்பதத்தை அதனால் தக்க வைக்க முடிய வில்லை. பயிர்கள் வாடி விடுகின்றது. கரையான்களின் எச்சங்களும் உரமாகப் பயன்படுகிறது. இரசாயன விவசாயத்திற்கு முன் மானாவாரி புன்செய் நிலங்களில் குப்பை, எரு, தொழு எரு இட்டு பயிர் செய்து வந்தால் நுண்ணுயிர்கள் மடியாமல் இருந்து இரவு நேரங்களில் உண்டாகும் குளிர்ச்சியான ஈர பதத்தை நிலம் தக்க வைத்து கொள்ள முடிந்தது. அந்த ஈரப்பதத்திலேயே (ஐப்பசி, கார்த்திகை பட்டங்களில்) பயிரிடும் நிலக்கடலை, எள்ளு, பாசிபயிர், உளுந்து, கொள்ளுபயிர்கள் நன்றாக விளைந்தது. தற்சமயம் செயற்கை உரம், இரசாயன மருந்துகளை பயன்படுத்தியதால் தண்ணீர் பாசானம் செய்யாமல் அறுவடை செய்ய முடிவதில்லை.

**எனது தோட்டத்தில் நான் அடைந்த பயன்கள்**

எனது 2 ஏக்கர் தோட்டத்தில் 150 தென்னை மரங்கள் இருந்தன. சென்ற ஆண்டு ஏற்பட்ட வறட்சியில் பாதி மரங்கள் பட்டு போய் விட்டன. தென்னை, மா இடைவெளிகளில் 40 மாமரங்களும், 30 எலுமிச்சை மரங்களும், 12 சப்போட்டாமரங்களும் உள்ளன. அது பட்டு போகாமல் தப்பித்து கொண்டன. பலாமரங்கள் 4ம் நெல்லி மரங்கள் 2 ம் உள்ளன. எனக்கு வயதாகி விட்டதால் தோட்டத்திற்கு செல்ல முடியவில்லை. குத்தகைக்கு விட்டுள்ளேன். இரண்டு ஆண்டுகள் ஒரு வருடத்திற்கு ரூ. 50,000 குத்தகை கொடுத்தார்கள் சென்ற ஆண்டு ரூ.35,000 குத்தகை கொடுத்தார்கள். இந்த ஆண்டு எவ்வளவு கொடுப்பார்கள் என்று தெரியவில்லை. தோட்டத்தில் ஆங்காங்கே தேக்கு மரங்களும் பூவரசு மரங்களும் வைத்து இருந்தேன். எனது மகனுக்கும், மகள்களுக்கும் வீடு கட்ட தேக்குமரம், பூவரசு மரங்கள் கொடுத்துள்ளேன். கொடுத்தது போக தேக்கு மரங்களும் பூவரசு மரங்களும் ரூ.2 லட்சத்திற்கு விற்று, பேங்கில் டெபாசிட் செய்துள்ளேன். அதில் வரும் வட்டியும், குத்தகை ரூபாயும் முதியோர் பென்ஷனும் வாங்கி குடும்பம் சிரமம் இல்லாமல் நடத்தி வருகிறேன். எனது பிள்ளை (மகன்) புதுவையில் குடும்பம் நடத்துகிறான்.நானும் எனது மனைவியும் இங்கு தனியாகத் தான் குடும்பம் நடத்தி வருகிறோம். எனது பிள்ளைகளும் நாங்கள் இருக்கும் இடத்திற்கு வந்து செல்கிறார்கள் என்னால் முடிந்த உதவிகளையும் செய்து வருகிறேன். நாங்கள் குடி இருக்கும். வீட்டு தோட்டத்தில் 10 பூவரசு மரங்களும், 7 எலுமிச்சை மரங்களும் வைத்து உள்ளேன். எனது அன்றாட செலவுகளுக்கு எலுமிச்சை பழங்கள் விற்று செலவு செய்கிறேன். பலவிதமான மூலிகை செடிகளையும், பூச் செடிகளையும் வைத்துள்ளேன். செடிவகை, கொடிவகை, காய்கறிகளையும் பயிரிட்டு எனது சுய தேவையை பூர்த்தி செய்து கொள்ளுகிறேன். என் மகன், மகள்கள் தயவு (பொருளாதாரம்) இல்லாமல் குடும்பம் செய்து வருகிறேன். மர விவசாயம் செய்ததினால் எனது முதிர்ந்த வயதிலும் நிம்மதியாக வாழ முடிகிறது.

த. குப்புசாமி
கெங்கவரம், கணக்கன்குப்பம் அஞ்சல்
ஆலம்பூண்டி (வழி)
செஞ்சி தாலுகா,
விழுப்புரம் மாவட்டம் – 604151
செல் : 9585854277

## மேகநாதனின் பலதானிய பயிர் விதைப்பு



நிலத்திற்கு இயற்கை வழியில் உரம் கொடுக்க பலதானிய பயிர்களை திரு. மேகநாதன் (64 வயது) கடைபிடித்து வருகிறார். இதனை கடந்த 6 வருடங்களாக செய்து வருகிறார். மேகநாதன் தனது 12 வது வயதிலிருந்து விவசாயத்தில் இறங்கிவிட்டார். இவர் எஸ்.எஸ்.எல்.சி வரை படித்துவிட்டு முழுமையாக விவசாயத்தில் இறங்கிவிட்டார். இவருடைய பலதானிய பயிர் வளர்ப்பு முறைபடி கீழ்கண்ட பயிர் விதைகளை சேர்த்து கொள்கிறார். கொள்ளு, உளுந்து, காராமணி, நெல், கம்பு. சோயாபீன்ஸ், புளியங்கொட்டை, வேப்பங்கொட்டை, பப்பாளி, கொத்தமல்லி, வெந்தயம், கடுகு, சீரகம், தக்கை பூண்டு (ஒவ்வொன்றும் 5 கிலோ). இவருடைய விதைப்பில் பல வகையான விதைகள் சேர்ந்துள்ளன, இந்த விதைகளை ஒரு ஏக்கருக்கு 27 கிலோ விதைக்கிறார். சிறிய விதைகளை தனியாகவும், பெரிய விதைகளை தனித்தனியாகவும் விதைக்கிறார். விதைத்த பின் 45 நாட்கள் கழித்து உழுது மண்ணோடு சேர்த்து விடுகிறார். இதனால் உரச் செலவு குறைகிறது என்று கூறுகிறார். ஒரு ஏக்கருக்கு (ரூ. 2000 செலவாகிறது ( விதை செலவு ரூ. 1000 + டிராக்டர் வைத்து உழுவது ரூ. 1000). இதனால் ரசாயன உரம் வாங்கும் (யூரியா, டிஏபி) செலவு இல்லை (ரூ. 5000 வரை).

### மரச்செக்கில் எண்ணெய் ஆட்டும் முறை

எள் விதைகளை 3 முறை நீரில் கழுவ வேண்டும். 3 முறை கழுவி வெயிலில் காய வைக்க வேண்டும். பிறகு 10 கிலோ எள்ளுக்கு 1 கிலோ பனங்கருபப்ட்டி சேர்த்து ஆட்ட வேண்டும். பின்னர் ஒரு எலுமிச்சம் பழம், ஒரு இளநீர் சேர்த்து விட வேண்டும். எண்ணெய் ஆட்டியவுடன் நாட்டு வெல்லம் ஒரு கட்டி எண்ணெயில் விட வேண்டும். ஆட்டிய பின் எண்ணெய்யை 4 நாட்கள் வெயிலில் வைத்து அதிலுள்ள ஈரத்தை போக்க வேண்டும். இவரிடமிருந்து 1 லிட்டர் ரு 275 என்று வாங்கி செல்கின்றனர்.

இயற்கை முறையில் உளுந்து சாகுபடி செய்து தோல் நீக்காமல் உளுந்த பருப்பு விற்பனை செய்கிறார். இவர் ஆடுதுறை – 5, வம்பன் – 6 போன்ற உளுந்து இரகங்களை இயற்கை முறையில் பயிர் செய்கிறார். சித்திரை பட்டத்தில் விதைக்கிறார். உளுந்த வடைக்கு தொளி நீக்காத பருப்பை ஐஸ் நீர் விட்டு கிரைண்டரில் ஆட்டுவதால் மாவு அதிகமாக பொங்கும். வடை மிருதுவாக இருக்கும். தற்சமயம் தோல் நீக்காத பருப்பு 1 கிலோ ரூ. 100 க்கு கொடுக்கிறார். ஒரு மூடை இருப்பு உள்ளது.

டி. மேகநாதன்
த/பெ. தங்கவேல் உடையார்
பெருமாள் கோவில் தெரு
மதுராம்பட்டு, தண்டரை வழி
திருவண்ணாமலை மாவட்டம்
செல் – 9626951552

## ஜெகம் இராதாகிருஷ்ணனின் மரம் வளர்ப்பு

ஜெகம் இராதாகிருஷ்ணன் (வயது 71) கடந்த 15 ஆண்டுகளுக்கு மேல் மரம் வளர்ப்பு பணியில் ஈடுபட்டுள்ளார். தனது 30 ஏக்கர் தோட்டத்தில் சந்தனம், மஹோகனி, செஞ்சந்தனம், மாதுளை, தேக்கு, மலைவேம்பு, கருப்பு மூங்கில் போன்ற மரங்களை நட்டுள்ளார். தற்சமயம் மரகன்றுகள் நடவு செய்வதற்கு பதில் மர விதைகளை விதைத்து விடுகிறார். மரம் நடுவதில் குறிப்பாக சந்தனம் நடவு செய்தால் ஓர் ஏக்கரிலிருந்து 3 கோடி பெருமான உள்ள மரங்களை 15 ஆண்டுகளில் உற்பத்தி செய்து விநியோகிக்கலாம். ஆனால் தற்சமயம் தமிழ்நாடு வனத்துறையின் விதிமுறைகளால் தமிழகத்தில் சந்தனம் சாகுபடி செய்ய விவசாயிகள் தயங்குகின்றனர். ஏனெனில் சந்தனத்தை வனத்துறை மட்டும் தான் வாங்கி ஏலம் போட முடியும். ஆனால் கர்நாடகா, கேரளாவில் விவசாயிகளுக்கு ஏற்ற சந்தன சாகுபடி முறையானது விவசாயிகளுக்கு பெரிதும் பயன் அளிப்பதாக திரு. இராதாகிருஷ்ணன் கூறுகிறார். அதாவது இம்மாநிலங்களில் சந்தன மரங்களை தனியாருக்கு விற்கலாம்.

### குண்டுமணி கொடியை மாடு கழுத்தில் கட்டுதல்

குண்டுமணி கொடியை மாட்டிற்கு கழுத்தில் சுற்றி விடுவது மாட்டிற்கு தொண்டை அடைப்பானுக்கும் கால் கோமாரிக்கும் பலன் தரும். குண்டுமணி இலை சாப்பிட பல்லுக்கு உறுதி. நாயுருவி விதை சாப்பிடவும் பல்லுக்கு வலு உண்டாகும்.

கழற்சிக்காய் வேலிகளில் பயிரிடுகிறார். இதனால் நட்ட மரங்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும்.

வரும் ஆகஸ்ட் 15ல் விதைத்திருவிழா, மரம் நடுதல் பற்றிய நிகழ்ச்சி கீழ் பென்னத்தூரில் ஏற்பாடு செய்து வருகிறார்.

ஜெகம் இராதாகிருஷ்ணன்
34– இராமலிங்க நகர் வீதி
பிரதான சாலை
திருவண்ணாமலை
செல் : 9443810950

## பாரம்பரிய கால்நடை இன பாதுகாப்போருக்கான பரிசு விழா

(அட்டை படம் விளக்கம்)

2017 ஆம் ஆண்டிற்கான பாரம்பரிய இன பாதுகாப்பிற்கான பரிசளிப்பு விழா 21–22 மே 2018 ஆம் ஆண்டு ஹரியானா மாநிலம், கர்னாவில் உள்ள கால்நடை மரபியல் நிறுவனத்தில் நடைபெற்றது. கீழ்கண்ட 20 நபர்களுக்கு தலா ரூ. 10,000மும், சான்றிதழும் வழங்கப்பட்டன. 1. தானேசிங்– இராஜஸ்தான்– மாக்ர ஆடு, 2. ஹரிராம் – இராஜஸ்தான்– மாக்ர ஆடு, 3. ராஜா – ஈரோடு, தமிழ்நாடு – மோலையாடு, 4. முத்துலெட்சுமி –ஈரோடு, தமிழ்நாடு– மோலையாடு, 5. மம்தா மற்றும் ஆனந்த் ஸ்ரீ – கர்நாடகா– மல்நாடு கிடா மாடு, 6. சிட்டு – சிவகங்கை– குன்றகுடி குட்டை மாடு , 7. ஜோரராம் தேவசி – இராஜஸ்தான்– ஜெய்சல்மிரி ஒட்டகம் 8. சுமர் சிங் பட்டி– இராஜஸ்தான் – ஜெய்சல்மிரி ஒட்டகம், 9. பித்துபாய் பீம்பாய் போரிசா – குஜராத் – கிர் மாடு , 10. ரமேஷ்பாய் சிவபாய் கன்னியா – குஜராத் – கிர்மாடு, 11. ஹரிஹர ஐயர் –கேரளா– வெச்சூர் மாடு, 12. ரமேஷ்பாய் ஜிசிங்பாய் தேவ்– குஜராத்– ஜாபார்பாடி எருமை, 13. சந்துபாய் ஜெயதேவ்பாய் பாலாலா– குஜராத் – ஜாபார்பாடி எருமை, 14. கோவிந் பராஜீ அயுசேகர்– மஹாராஷ்டிரா– பண்டர்புர் எருமை, 15. முத்துகிருஷ்ணன் – இராமநாதபுரம், தமிழ்நாடு– பட்டணம் ஆடு 16. முனியசாமி– இராமநாதபுரம், தமிழ்நாடு – பட்டணம் ஆடு , 17. பூபதிபாய் ஜெயதேவ்பாய் – குஜராத்– ஹலாரி கழுதை, 18. சாதானந்தன்– கேரளா– உம்பளச்செரி மாடு 19. ஓம்பிரகாஷ் கன்டீஸ்வர் கலோகர்– மஹாராஷ்டிரா – நாக்பூர் எருமை , 20. கணபதிராவ் தன்பாஜீ டோலே– மஹாராஷ்டிரா– நாக்பூர் எருமை.

இந்த பாரம்பரிய கால்நடை இன பாதுகாப்பு பரிசளிப்பு விழா மற்றும் கருத்தரங்கத்தை கால்நடை மரபியல் நிறுவனமும் (NBAGR) மதுரை சேவா நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்தன. கல்லூரி மாணவர்கள், பள்ளி மாணவர்களுக்கான பல்லுயிர் பன்மய பாதுகாப்பு போஸ்டர் வடிவமைப்பு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. இக்கருத்தரங்கில் கலந்து கொண்டோர் கர்நாலுக்கு அருகே உள்ள ஜுன்டலா பசு மடத்தை பார்வையிட்டனர். அங்குள்ள பசுமடத்தில் உள்ள பசுக்களை ஹரியானா மற்றும் சாஹிவால் இனங்களாக தரம் உயர்த்த கடந்த நான்கு வருடங்களாக கால்நடை மரபியல் நிறுவனம் செய்யும் பணிகள் குறித்து விளக்கி கூறப்பட்டது. தரமான ஹரியானா, சாஹிவால் பொலிகளை விந்து மூலம் இனப்பெருக்கம் செய்யப்பட்டதில் இது நாள் வரை 47 கன்றுகள் பிறந்துள்ளன. இக்கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களுக்கு மூலிகை மசால் உருண்டை தயார் செய்யும் விதம் எடுத்து கூறப்பட்டது. இதை சேவா நிறுவன பணியாளர்கள் சகுந்தலா, செல்லம், ஜெயபாண்டி, சுவாமிநாதன் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். தேசிய பல்லுயிர் பன்மய வாரியம், சென்னை பரிசளிப்பு விழாவிற்கு நிதி உதவி செய்தது. பரிசு பெற்றவர்களின் முழு விவரம் கீழ்காணும் இணையதளத்தில் பார்த்து தெரிந்து கொள்ளலாம். www.sevango.in

## காட்டுயானம் நெல் இரக உற்பத்தி

கடந்த 4 ஆண்டுகளாக பாரம்பரிய நெல் ரகங்களை இயற்கை முறையில் பயிர் செய்து வருகிறேன். பொறியியல் கல்லூரியில் பி.இ. படித்து விவசாயத்திற்கு வந்து முழு நேர விவசாயியாக மாறி விட்டேன். "காட்டுயானம்" என்ற பாரம்பரிய நெல்ரகம் 180 நாட்களாக உள்ளது. இந்த ரகத்தை 4 வருடங்களுக்கு முன்னர் பயிர் செய்த போது இதில் பல நெல் ரகங்கள் கலந்திருந்தன. இதில் காட்டுயானம் கதிரை தனித்தனியாகப் பிரித்து எடுத்து வெள்ளாமை செய்து தற்சமயம் சுத்தமான இரகமாக உருவாக்கியுள்ளேன்.

இந்த நெல் அரிசியை சமைத்து உண்பதால் யானைபலம் கிடைக்கும் என சொல்வர். சர்க்கரை சத்துள்ளவர்கள் இந்த ரக அரிசி உணவை உட்கொண்டால் உடம்பில் இன்சுலின் சீராக இருந்து நோயை குணப்படுத்தும்.

இந்த ரகத்தைப்பயிர் செய்யும் சமயம் நல்ல இடைவெளி விட்டு நடவு செய்ய வேண்டும். இடைவெளி குறைந்தால் வெறும் வைக்கோல் மட்டும் தான் கிடைக்கும்.

சீரகசம்பா விதை கிலோ ரூ. 100 க்கு விநியோகம் செய்கிறேன்.

வெங்கடேஷ்,
102– பாரதிநகர்
இ.பி காலனி, சாலமேடு
விழுப்புரம் – 605 602

## இராதாகிருஷ்ணனின் இயற்கை வேளாண்மை



விழுப்புரம் மாவட்டம், கண்டமானடி கிராமத்தில் திரு. இராதாகிருஷ்ணன் (48 வயது) எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்து விட்டு விவசாயம் செய்து வருகிறார். 1990 ம் ஆண்டு கோ ''43'' என்ற நெல் ரகம் பயிர் செய்து கதிர் வரும் சமயம் பூச்சிகளைக் கட்டுப்படுத்த டைமெக்ரான் மற்றும் ஹினோசான் என்ற இரண்டு இரசாயன மருந்துகளை சேர்த்து தெளித்த சமயம் மயக்கமடைந்து விட்டார் . சிகிச்சைக்குப் பின்னர் இரசாயன மருந்திற்கு மாற்று உண்டா என சிந்தித்தார். இத்தருணத்தில் சி.ஐ.கே.எஸ். (CIKS) என்ற தொண்டு நிறுவனத்தில் நிர்மலா என்ற பணியாளர் மூலம் மாற்றுவழி பூச்சி மருந்து முறைகளைப் பற்றி தெரிந்து கொண்டார். நபார்டு வங்கி ஒத்தாசையுடன் கோவை இராமகிருஷ்ண மிஷன் ஆசிரமத்தில் 5 நாள் பயிற்சியில் இயற்கை வேளாண்மையைப் பற்றி முழுமையாகத் தெரிந்து கொண்டார். இதற்குப்பின்னர் நம்மாழ்வாரின் ''வானகம்'' என்ற பயிற்சி மையத்தில் தங்கி அங்கு கடைபிடிக்கப்படும் இயற்கை வேளாண்மை தொழில்நுட்டங்களை கூர்ந்து பார்த்தார். தனது நிலத்தில் தான் தெரிந்து கொண்ட இயற்கை வேளாண்மை முறைகளைக் கடைபிடிக்கத் துவங்கினார். ஊரில் மற்ற விவசாயிகள் இவரது அணுகுமுறையைப் பார்த்து ஏளனம் செய்தனர். இவருக்கு பொருளாதர ரீதியில் பணச்சிக்கல் வந்த போதும் யாரும் கடன் தர முன் வரவில்லை. இவர் தனது கொள்கையில் வைராக்கியம் பெற்று அனுபவத்தில் தனது இயற்கை வேளாண்மை முறைகளில் திருத்தம் செய்யும் பயிற்சிகள் பெற்றும் முறைபடுத்தினார். 2009 லிருந்து இரசாயன உரமின்றி முழுக்க முழுக்க இயற்கையிலேயே வேளாண்மையை செய்து வருகிறார்.

**பாரம்பரிய இரகம் விளைவித்தல்**

இச்சமயத்தில் திருவாரூர் நெல் ஜெயராமனின் தொடர்பு கிடைத்தது. அவரிடமிருந்து ''மாப்பிள்ளை சம்பா'' நெல்ரக விதை பெற்று பயிரிட ஆரம்பித்தார். இந்த நெல்லில் பல நெல் ரகங்கள் கலந்திருந்தன. இரண்டு வெள்ளாமையில் பிற ரகங்களை களைந்து சுத்த ''மாப்பிள்ளை சம்பா'' இரகத்தை உருவாக்கினார். இவ்வாறு செய்யும் சமயம் மாப்பிள்ளை சம்பா ரகத்தின் அம்சங்களான 6 அடி உயரம், 250–270 மணிகள் கொண்ட கதிர், 150 நாட்கள் வயது, 60–80 தூறுகள், வறட்சிதாங்குதல், வெள்ளத்திற்கும் தாக்கு பிடித்தல் போன்றவற்றை உணர்ந்து கொண்டார். இவர் தற்சமயம் 16 பாரம்பரிய ரகங்களைப் பாதுகாத்து உற்பத்தி செய்து வருகிறார்.

மைசூர் மல்லிகை என்ற குட்டைரக வெள்ளை நிற அரிசி நெல்லையும் விளைவித்து வருகிறார். இது 135 நாட்கள் கொண்டது. 50–60 தூறுகள் இருக்கும். பாரம்பரிய ரகங்களை 50 செ.மி x 50 செ.மி. அதாவது 11/2 x 11/2 அடி இடைவெளியில் பயிர் செய்து வருகிறார்.

இவரிடம் ''நவரா'' என்ற மூலிகைக்குணம் கொண்ட நெல்ரகமும் உள்ளது. இதை நெல் கிலோ ரூ 150க்கும் அரிசி ரூ 330க்கும் விற்பனை செய்கிறார். வீட்டில் முழு உணவும் இயற்கையில் விளைந்த சிவப்பு அரிசியில் தயாரிக்கப்படும். இதற்கு இவரது துணைவியர் வசந்தாவும் ஒத்துழைப்பு நல்குகிறார். இவரது குடும்பத்தில் 2 குமாரர்கள் பொறியியலில் பட்டம் பெற்று வேலைபார்த்து வருகின்றனர்.

ஆர். இராதாகிருஷ்ணன்
த/பெ. இராஜசுந்தரம்,
கண்டமானடி அஞ்சல்,
விழுப்புரம் மாவட்டம் – 605401
செல் : 9840559532

## வாலான் அரிசி



திருச்சி மாவட்டத்தில் பொய்யாமணி, மேலநங்கவரம் பகுதியில் நீர் கசியும் பள்ளங்களில் வாலான் நெல் பயிரிடப்படுகிறது. இந்நெல் அதிக வயதுடைய நெல்லாக இருப்பதாலும் நீர்த்தேவை அதிகமாக இருப்பதாலும் இந்த நெல்லை விவசாயிகள் அதிகம்

பயிரிடுவதில்லை. அயிலாபேட்டை தருமராஜன் இந்த நெல்லின் மகிமையை கேள்விப்பட்டு இந்த நெல்லை தொடர்ந்து பயிர் செய்து வருகிறார். இந்த நெல் அரிசியை முன்பு அரசர்கள் வெற்றியை கொண்டாடும் நாட்களில் உணவில் சேர்ப்பர். இந்த அரிசியுடன் வெல்லம் கலந்து உண்டால் நல்ல சக்தி கிடைக்கும். குறிப்பாக வயதானவர்களுக்கு ஏற்றது. வயதிற்கு வந்த பெண்களுக்கு இதில் பிட்டு வைத்து சாப்பிட கொடுப்பர். வயது : 5 மாதம், அரிசி நிறம் : சாதாரண வெள்ளை. இந்த நெல்லில் தரத்தை கூட்ட அதாவது இதன் வயதை குறைப்பதற்கு முந்தி விளையும் கதிரை தனியாக எடுத்து வைத்து விதைக்கும் உத்தியை கையாண்டு வருகிறார். இதனால் அடுத்த 2 வெள்ளாமைகளில் வெற்றி பெறுவேன் என கூறுகிறார். இந்த அரிசியை கிலோ ரூ. 75க்கு கொடுக்கிறார். இதை கடைக்காரர்கள் மொத்தமாக வாங்கிச் சென்று ரூ. 120 வரை விற்கின்றனர்.

ஆர். தர்மராஜன்
அயிலாபேட்டை
திருச்சி மாவட்டம்
செல் : 9344177662
தொகுப்பு : கோமதிநாயகம், சேவா

## பாரம்பரியஅறிவிற்கும் அடிதள கண்டு பிடிப்புகளுக்கும் மதிப்பூட்டுதல்

“சிருஷ்டி” என்ற நிறுவனம் பிராக் என்ற (BIRAC, DBT, GoI) நிறுவனத்துடன் இணைந்து மாணவர்கள் மூலம் பாரம்பரிய அறிவு மற்றும் அடித்தள கண்டுபிடிப்புகளை மதிப்பூட்டும் அராய்ச்சியை மேற்கொள்கிறது. கல்லூரி ஆராய்ச்சி மாணவர்களை அழைத்து ஒரு மாத காலத்தில் சில உத்திகளை பரி சோதித்து மதிப்பு கூட்டியுள்ளன. இதில் சில உத்திகளை கீழே கொடுத்துள்ளோம்.

1. குஜராத்தில் பிப்பாவ் கிராமத்தில் நாபர்பாய் முகி என்பவர் பசு மாடுகளின் மடி நோயைக் குணப்படுத்த கீழ் கண்ட முறையில் வைத்தியம் செய்கிறார்.

கம்பு மாவு 100 கிராம், சாதாரண உப்பு 25 கிராம், மஞ்சள் தூள் 1/2 தேக்கரண்டி. இத்துடன் நீர் சேர்த்து கிடைக்கும் களிம்பு மாவை மடியில் பூச வேண்டும். இந்த முறையை ஆராய்ந்து பார்த்த போது நோய் உண்டாக்கும் காரணி கிருமியின் (Staphylococus aureus) எண்ணிக்கை கனிசமாகக் குறைந்து விட்டது.

2. ஒரிஸ்ஸாவில் பரக்கிராமத்தில் அடிதண்டி என்பவர் மாட்டு சிறுநீரகக் பிரச்சனைக்கு யூகலிப்டஸ் மர விதைகள் 4 எடுத்து ஓர் இரவு நீரில் ஊற வைத்து வடி கட்டிய நீரை வாய் மூலம் தருகிறார். இதனால் நோய் எதிர்ப்புத் தன்மை இதற்கு உண்டு (Antioxidant) என கண்டறியப்பட்டது.

3. ஒடிஸ்ஸா மாநில விவசாயி சிவபிரஸாத் படன் கூறியபடி எருக்களை, நொச்சி, வேம்பு, வேரில்லா கொத்தான் (Cuscuta reflexa) இவைகளை சம அளவு எடுத்து இடித்து நீரில் 2 நாட்கள் ஊற வைக்க வேண்டும். இதனை வடிகட்டி பயிருக்குத் தெளித்தால் பயிர் பாதுகாப்பு கிடைக்கும்.

இதனை ஆராய்ச்சி செய்த போது மேற்படி உத்தியில் சிறிது மாற்றம் செய்து உபயோகப்படுத்தினால் இலை கருகல்நோய், சாறு உறிஞ்சும் அசுவினிகள், இலைத்துளைப்பான் போன்றவை நன்கு கட்டுபட்டதாகக் கூறப்படுகிறது.

4. மாடுகளின் உடம்பு உஷ்ணம், இருதயத்துடிப்பு, ஜீரணிக்கும் காலம், கண்ணின் ஈரத்தன்மை போன்றவற்றை அறிந்து தகவல் தெரிவிக்க எலெக்ட்ரானிக் கருவிகளை பொருத்தி சோதனை செய்யும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்த கருவியை இன்னும் மேன்மைப்படுத்தி வடிவமைக்கும் முயற்சி நடைபெற்று வருகின்றது.

நன்றி : தேனீ :அக்.–மார்ச் 18

## பல்வேறு நன்மைகள் தரும் உயிர் நுட்ப பயிர் மேலாண்மை



சாகுபடி நிலங்களாக உள்ளன. இங்குள்ள 8 வட்டாரங்களில் 33 ஊராட்சிகளைக் கொண்ட பெண்ணகரம் வட்டாரம் மிகவும் பின்தங்கிய வட்டாரமாகும். இது மணல் கலந்த செம்மண் நிலமாகும்.

இந்த மண்ணில் குறைந்த அளவு நைட்ரஜன் மற்றும் பாஸ்பேட் உள்ளது. இங்குள்ள விவசாயிகள் மழைக் காலங்களில் சிறு தானியங்களான கேழ்வரகு, சாமை, கொல்லு மற்றும் மொச்சை, துவரை போன்ற பயிர்கள் பயிரிட்டு வருகின்றனர். சோளம் மற்றும் சிறிதளவு சிறு தானியங்களை ஆடிப்பட்டம் மற்றும் புரட்டாசி பருவத்தில் பயிரிட்டு வருகின்றனர்.

இப்பகுதியிலுள்ள விவசாயிகள் போதுமான மற்றும் அனைத்து பகுதிகளுக்கும் நிரந்தரமற்ற மழை, பற்றாக்குறை மழை போன்ற பிரச்சனைகளை சந்தித்து வருகின்றனர். மேலும் மண்ணில் உயிர்சத்து இல்லாமை, நிலத்தடி நீர் மட்டம் குறைவு, மண் அரிமானம், பகுதிக்கு உகந்த பயிர் உற்பத்தி செயல்களான ஒரே பயிரை பயிரிடுவது. அளவற்ற இரசாயாண பொருட்களை பயன்படுத்துவது போன்ற செயல்கள் நீடித்த நிலையற்ற விவசாயத்திற்கு வழிவகுக்கிறது. ஏ.எம்.இ (AME) என்கின்ற சமூக முன்னேற்ற அமைப்பு சுற்றுச்சூழலுக்கு உகந்த உயிர் தொழில் நுட்பத்தை பயன்படுத்துவதன் மூலம் மீண்டு வருகின்ற விவசாய முறைகளை பின்பற்ற வைக்கும் நோக்கத்தில் 2011–2012 ஆண்டு முதற்கொண்டே பென்னகரம் வட்டத்தில் பணியாற்ற தொடங்கியது.

இவ்வமைப்பு ஆரம்பத்தில் அதாவது 2011–2012 ஆண்டுகளில் 5 கிராமங்களிலும் பின்பு தனது பணிகளை வட்டாரத்தில் உள்ள 25 கிராமங்களிலும் பணியாற்ற தொடங்கியது. அனைத்து கிராமங்களிலும், விழிப்புணர்வு கூட்டம் மற்றும் கிராமசபா கூட்டங்கள் நடத்தி திட்டத்தின் நோக்கம் செயல்பாடு மற்றும் மக்கள் ஒத்துழைப்பு பற்றி எடுத்துரைக்கப்பட்டது. பின்பு கிராமங்கள் தோறும் மக்கள்பங்கேற்பு திறனாய்வு கூட்டங்கள் நடத்தி கிராமத்தில் உள்ள இயற்கை வளங்கள், வாழ்வாதார வளங்கள் மற்றும் மக்கள் சந்திக்கும் சவால்கள், மற்றும் தற்போதுள்ள நிலைமைகள் பற்றி தெரிந்து கொள்ளப்பட்டது. இந்த கூட்டங்கள் மக்கள் மத்தியில் நல்ல நட்பையும் ஒற்றுமையான செயல்பாடு செயல்படுத்த வேண்டிய வேலைகள் செய்வதற்கு உறுதுணையாக இருந்தது.

பின்பு ஆர்வமுள்ள விவசாயிகளைக் கொண்டு 20 நபர்கள் கொண்ட சுற்று சூழலுக்கு உகந்த விவசாயிகள் அமைக்கப்பட்டது. இக்குழுக்கள் கூட்டங்கள் நடத்தி தாங்கள் எவ்வாறு எவ்விதமான பயிர் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது. இயற்கை உரங்கள் உயிர் பூச்சி கட்டுப்பாடு குறித்து பேசி முடிவெடுத்தார்கள்.

முதலில் 2013–14 ம் ஆண்டில் சற்று மழை இருக்கும் பட்சத்தில், நிலக்கடலை முதன்மை பயிராகவும், துவரை மற்றும் அவரை ஊடுபயிராகவும், சோளம் வேலி பயிராகவும் ஆமணக்கு பூச்சிகளை கவர்ந்திழுக்கும் பயிராகவும் பயிரிடத் திட்டமிட்டனர். 2014–15 ம் ஆண்டில் மழைப் பருவத்திற்கு முன் கிடைத்த மழையை பயன்படுத்தி 13 கிராமங்களில் உள்ள விவசாயிகள் நிலக்கடலை பயிரிட்டனர். முதன்மை பயிரில் ஏற்பட்ட பயிர் நஷ்டத்தை ஈடு செய்ய பின்பு குறைந்த கால பயிரான உளுந்து பயிரிட்டனர். மீதமுள்ள 7 கிராமங்களிலும் சோளம் 3 கிராமங்களிலும் சாமை 2 கிராமங்களிலும் கேழ்வரகு 2 கிராமங்களிலும் செப்டம்பர் மாத இறுதியில் பயிரிட்டனர்.

**செய்வதன் மூலம் பயிலுதல்**

சுற்றுச்சூழலுக்கு உகந்த பயிரிடும் முறை வயல் வெளிப் பள்ளி (FFS) செயல்படுத்துவதன் மூலம் தெரிந்து கொள்ள ஏதுவாக உருவாக்கப்பட்டது. இப்பள்ளியில் கிராமங்களில் உள்ள ஆர்வமுள்ள இளைஞர்கள் மற்றும் பெண்கள் பயிற்றுவிக்கப்பட்டு அவர்கள் விவசாயிகளுக்கு சுற்றுச்சூழலுக்கு உகந்த பயிர் தெரிவு, மண் மற்றும் தண்ணீர் பாதுகாப்பு, மண், உரம், பயிர் பன்மயம், ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம், போன்ற தொழில் நுட்பங்களை பயிற்றுவித்தனர்.

**மண் உரம் கூட்டுதல்**

மண்ணில் போதுமான மண் சத்து மேலாண்மையில் கவனம் கொள்ளாமையே இங்குள்ள விவசாயிகளின் பிரச்சனை, அதற்கு காரணம் விவசாயிகள் கால்நடைகள் வளர்ப்பதை குறைத்து விட்டதன் காரணமான மண்ணுக்கு இயற்கை உரம் கிடைப்பது இல்லை. இந்நிலையில் சில மாற்று செயல்களான. விதை மேலாண்மை, பசுந்தாள் உரமிடுதல், தொழு உரமிடுதல் உயிர் உரமிடுதல் போன்றவைகள் விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது.

விதைகளை உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், ரைசோபியம் பூஞ்சை கட்டுபாட்டிற்காக டிரைகோடெர்மா விரிடி, சூடோமோனஸ், பாஸ்போபாக்டீரியா மற்றும் தொழுஉரம் போன்றவற்றில் ஊற வைத்து பயன்படுத்துவது போன்ற முக்கியமான வழிகளை விவசாயிகள் கற்றுக் கொண்டனர். இந்த முறை பயிர்களை பூச்சிகள் தாக்குவதிலிருந்து காப்பது மட்டுமில்லாமல் பயிர்கள் சுற்றுச்சூழலுக்கு ஒவ்வாத நிலையான நிலத்தில் ஈரமின்மை மற்றும் சத்து குறைவு போன்ற பிரச்சினைகளையும் தாங்கி வளர்கின்றன.

பசுந்தாள் உரமிடுதல் மற்றொரு முறையாக வயல்வெளி பள்ளி மூலமாக விவசாயிகள் கற்றுக் கொண்டுள்ளனர். பெண் விவசாயிகள் தங்களது நிலத்தில் முதல் பயிரை பயிரிடுவதற்கு முன்பாக சனப்பை பசுந்தாள் பயிர் பயிரிட்டு அதை மடக்கி உழுது விடுகிறார்கள். இம்முறைகளை கடந்த 2012–13 ஆண்டில் முதல் முறையாக செய்து 1 முதல் 11/2 டன் சனப்பை பயிரை தங்களது நிலத்தில் மடக்கி உழுது விட்டனர். இதன் முலம் தங்களது நிலத்தில் எவ்வளவு நைட்ரஜன் சத்து கிடைத்துள்ளது என்பதையும் தெரிந்து வைத்துள்ளனர். இம்முறை மிகவும் குறைந்த செலவானதாகும். தொழு உரமிடுவதை காட்டிலும் அதாவது ஒரு டிராக்டர் லோடு தொழு உரம் ரூ. 2500 கொடுத்து வாங்குவதை காட்டிலும் 4 டன் சனப்பையை மடக்கி உழ ரூ. 300–400 வரையே செலவாகிறது.

தொழுஉரமிடுதல் நிலத்திற்கு தண்ணீர் சேமிக்கும் திறனை மேம்படுத்துகிறது என்பதை சில சோதனைகளுக்கு பின் விவசாயிகள் தெரிந்து கொண்டுள்ளார்கள். தொழு உரத்தை கொண்டு எவ்வாறு உரத்தன்மையை கூட்டுவது, மண்ணில் உள்ள சத்துக்களின் அளவை எவ்வாறு கூட்டுவது போன்ற வழிமுறைகளை விவசாயிகள் தெரிந்து கொண்டுள்ளனர். இம்முறையில் 300 கிலோ தொழு உரம், 50 கிலோ பாஸ்பேட் மற்றும் 1 கிலோ ரைசோபியம், அசோஸ்பைரில்லம், டிரைகோடெர்மா பாஸ்போபேக்டீரியா சேர்த்து செறிவூட்டப்படுகிறது.

**மூடாக்கு உத்தி**

மூடாக்கு உத்தியினால் நிலத்திலிருந்து வெளியேறும் ஈரம் இழப்பை தவிர்க்கலாம். 2013–14 ம் ஆண்டில், நிலக்கடலை வயலில் துவரை முதல் ஊடுபயிராக பயிரிடப்பட்டது. அந்நேரத்தில் எதிர் பார்த்த அளவு மழை இல்லாத காரணத்தால் கடலை அறுவடைக்கு பின் துவரை பூக்கும் பருவத்தில் வெப்பம் அதிகரிப்பு மற்றும் மண்ணின் ஈரம் இழப்பு காரணமாக 30–40 சத பூக்கள் கொட்டியது. இப்பிரச்சனை மூடாக்கு செய்யப்பட்ட நிலத்தில் பூ கொட்டுவது இல்லை. இதனால் மூடாக்கு செய்யப்பட்ட துவரை செடியில் செடிக்கு 1/2 கிலோ முதல் 1 கிலோ துவரை கூடுதல் மகசூல் கிடைத்தது.

**பல்வேறு பயிர்கள் பயிரிடுவதை ஊக்கப்படுத்துதல்**

பல்வேறு பயிர்களை பயிடுவதன் மூலம் பல்வேறு நன்மைகள் கிடைக்கிறது. அதாவது பண்ணை நஷ்டத்தை மீட்டுடெடுத்தல், பூச்சி மேலாண்மை, நல்ல சத்து கிடைப்பது, கூடுதல் உணவு மற்றும் வருமானம் கிடைத்தல், வறட்சி மேலாண்மை போன்றவைகள் கிடைக்கின்றது. இம்முறையில் கடலை வயலில் ஆமணக்கு பூச்சிகளை கவர்ந்திழுக்கும் பயிராகவும், சோளம் எல்லை வரப்பு பயிராகவும், துவரை முதன்மை ஊடுபயிராகவும், தட்டை ப்பயிர் அடுத்த ஊடு பயிராகவும் 280 விவசாயிகள் சாகுபடி செய்தனர். பல்வேறு பயிர்களை பயிரிடுவது பூச்சி வருவதை தவிர்க்கிறது. கடலைக்கு அடுத்த பயிராக மீதம் இருக்கின்ற ஈரத்தை பயன்படுத்தி உளுந்து 40நாள் பயிராக பயிரிடப்பட்டது. இம்முறையில் 300 விவசாயிகள் 150 ஏக்கர் நிலத்தில் கொள்ளு, கடலைக்கு பின் இரண்டாவது பயிராக மீதமுள்ள ஈரத்தையும் கடலை நிலை நிறுத்திய சத்துக்களைப் பயன்படுத்தி பயிரிடப்பட்டது. இது விவசாயிகளுக்கு கூடுதல் வருமானத்தை தருவதுடன் கால்நடைகளுக்கு தீவணமும் கிடைக்கின்றது.

**ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை**

வயல்வெளிப் பள்ளிகளில் விவசாயிகள் தெரிந்து கொள்வதற்காக உயிர் தொழில்நுட்ப பூச்சி மேலாண்மை மற்றும் உயிர்தொழில் நுட்ப மற்றும் பூச்சி மேலாண்மை இரண்டு முறையிலும் பயிரிடப்பட்டு செயல்படுத்தப்பட்டது. இதில் மூலிகை பூச்சிகொல்லி மருந்து தயாரித்து தெளித்ததால் பூச்சிகள் கட்டுபடுத்தியது. வரப்பு பயிர் மற்றும் பூச்சி கவர்ச்சி பயிர் பயிரிடுவதன் முக்கியதுவத்தை விவசாயிகள் தெரிந்து கொண்டனர். சில வயல்வெளி பள்ளிகளில், கடலை வயலில் துவரை மற்றும் அவரை ஊடுபயிராகவும் சோளம் வரப்பு பயிராகவும் ஆமணக்கு மற்றும் தட்டை பயிர் பூச்சி கவர்ச்சி பயிராகவும் (சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த)பயிரிடப்பட்டது. சாமை வயல்களில் சோளம் வரப்பு பயிராகவும், துவரை ஊடுபயிராகவும் பயிரிடப்பட்டது.

ஃபிரமோன் அட்டை, மஞ்சள் நிற ஒட்டும் அட்டை, விளக்கு பொறி போன்றவை வைக்கும் முறையை ஜெர்மளாம்பட்டி, அரங்கபுரம், பி. அக்ரஹாரம், காட்டு நாயக்கனகள்ளி, கௌரி செட்டிபட்டி போன்ற 5 கிராமங்களிலுள்ள நிலங்களில் பின்பற்றப்பட்டது. மஞ்சள் நிற ஒட்டும் பொறி பழைய மண் பானை, பயன்படுத்திய தண்ணீர் பாட்டில்கள் பழைய பிளாஸ்டிக் கப்புகளில் தயாரித்து வயல்களில் வைக்கப்பட்டது. இதில் சாறு உறிஞ்சும் பூச்சிகளை மட்டும் கவர்வதுடன் இல்லாமல் அனைத்து மற்ற விவசாயிகளின் கவனத்தையும் இழுத்தது. இந்த மஞ்சள் நிற ஒட்டும் பொறியில் ஆயிரக் கணக்கான சாறு உறிஞ்சும் பூச்சிகள் ஒட்டிக் கொள்வதை விவசாயிகள் கண்டனர். ஒரு மஞ்சள் நிற ஒட்டும் பொறியில் 267 பல்வேறு சாறு

உறிஞ்சும் பூச்சிகள் ஒட்டிக் கொண்டதை பார்வையாளர்கள் கண்டறிந்தனர். இவற்றை பார்த்த குண்டேகாட்டுகுளி மஞ்சநாயக்கன்கள்ளி, நலம்பட்டி, சின்னபூம்பள்ளம், வண்ணாதிபட்டி போன்ற ஊர்களை சார்ந்த விவசாயிகள் மஞ்சள் நிற ஒட்டும் பொறிகளை தங்கள் இடத்தில் கிடைக்க கூடிய பிளாஸ்டிக் பாட்டில், தேங்காய் முடி, உடைந்துபோன மண்பானை போன்றவைகளிலிருந்து 15 மஞ்சள் நிற பூச்சி ஒட்டும் பொறிகளை தயாரித்து பயன்படுத்தினர். இந்த மஞ்சள் நிற ஒட்டும் பொறிகளில் ஏராளமான சாறு உறிஞ்சும் பூச்சிகள் ஒட்டுவதை பார்த்ததுடன் தங்களது கடலை பயிர் இப் பூச்சிகளிலிருந்து காப்பாற்றப்பட்டதை கண்கூடாக பார்த்தறிந்தனர். ஆகவே மஞ்சள் நிற ஒட்டும் பொறி சிறந்த உயிர் பூச்சிக் கட்டுப்பட்டு முறை என்றும் சாறு உறிஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த அதுவே சிறந்த முறை என்றும் தெரிந்து கொண்டனர்.

**சில உறுதி செய்யப்பட்ட நன்மைகள்**

உயிர் தொழில் நுட்ப விதை நேர்த்தி பயிரின் வேர் பெருகும். அமைப்பை ஊக்குவிக்கிறது. இது பயிரின் ஈர இழப்பினை தாங்கி வளர்வதுடன் மண்ணில் நைட்ரஜன் சத்தை நிலை நிறுத்துகிறது.

அரிசி கஞ்சி திரவத்தை கடலை பயிரில் தெளிப்பதால் பயிர் வறட்சி தாங்கி ஈர இழப்பை காப்பாற்றுகிறது. அரிசி கஞ்சி திரவத்தை கொள்ளு பயிரில் தெளிப்பதால் அதன் வளர்ச்சி பருவத்தில் இலைகள் உள்ள துளைகள் (ஸ்டொமேட்டா) திறப்பதை தவிர்த்து இலைகளின் மூலம் ஏற்படுகின்ற ஈர இழப்பை தடுக்கிறது. சணப்பை பயிரை மடக்கி உழுதல், செறியூட்டப்பட்ட தொழுஉரமிடுதல் உயிர் உரங்களிடுதல் முதலானவை மண்ணின் ஈரத் தன்மையை காக்கின்றது.

தொழுஉரமிடுதல், ஊட்டமேற்றிய தொழுஉரமிடுதல், உயிர் உரங்களிடுதல் ராக்பாஸ்பேட் இடுதல் போன்றவை மண் பகுதியையும் வேர் பகுதியையும் வறட்சி காலங்களில் சூடாகாமல் பார்த்து கொள்கிறது.

வயல்வெளிப் பள்ளிகளில் மற்றும் விவசாயிகள் வயல்களிலும் 30 பயிர்களை அறுவடை செய்து ஆராய்ந்து பார்த்ததில் மணிகளின் எண்ணிக்கை, கிளைகளின் எண்ணிக்கை செடி வளர்ச்சி போன்றவற்றில் குறிப்பிட்ட வித்தியாசம் இருந்தது.

விருத்தாச்சலம்12 என்ற கடலை இரகம் நல்ல வறட்சி தாங்கி வளரக் கூடியதாகவும், விரைவில் வளரக் கூடியதாகவும். நிறைய தழைகளை கிளைகளை விடுவதன் மூலம் தானே மூடாக்கு போட்டுக் கொள்கிறது. இதன் விதை நல்ல வீரியத்தன்மை உள்ளதாகவும் மண்ணில் விரைவில் வேர் ஊன்றி வளர்கிறது.

சுற்றுச் சூழலுக்கு உகந்த தொழில் நுட்பங்களை பின்பற்றுவதால் வறட்சி காலங்களில் பயிர் நஷ்டமாகாமல் பாதுகாக்கப்படுகிறது. உதாரணத்திற்கு 2015– 16 ம் ஆண்டில் கடலை சாகுபடியின்போது அறுவடை செய்வதற்கு 10 முதல் 15 நாட்களுக்கு முன்பாக ஒரு சில இடத்தில் போதுமான மழை இல்லாமலும் சில இடங்களில் அதிகமான மழையும் இருந்தது. அப்போது அந்த மாறுப்பட்ட மழை பயிரிடப்பட்ட கடலை, துவரை, தட்டை பயிர் ஆகியவற்றை பெரிதும் பாதித்தது. ஆனால் இந்த உயிர் சூழல் முறையை பின்பற்றிய பயிர்கள் அவ்வளவாக பாதிக்கவில்லை. அதிகளவில் தொழுஉரமிடுதல் அதிகமான ஈரத்தன்மையை பாதுகாக்கும் திறனை கூட்டுகிறது.

உயிர்தொழில் நுட்ப பயிர் மேலாண்மை பயிர் மகசூலை கூட்டுவதுடன் பல்வேறு உணவு தானியங்களும் கிடைக்கின்றன. பல்வேறுபட்ட பயிர் சாகுபடியில் முதன்மை பயிரிலிருந்து மகசூல் கிடைப்பதோடு மட்டுமல்லாமல் ஊடுபயிர், வரப்பு பயிர், பூச்சி கவர்ந்திழுக்கும் கவர்ச்சிபயிர் போன்றவைகளிலிருந்தும் மகசூல் கிடைக்கின்றன. முதன்மை பயிரான கடலை அல்லது கேழ்வரகு, சாகுபடியில் ஊடுபயிரான தட்டைப்பயிர் 8– 10 கிலோ காய்களும் பூச்சி கவர்ச்சி பயிரான ஆமணக்கு 80–100 கிலோ விதைகளையும், வரப்பு பயிரான சோளப்பயிர் 10 – 25 கிலோ மகசூல் கிடைக்கின்றன. இதோடு இல்லாமல் 500 கிலோ சோளதட்டை மாடுகளுக்கு தீவனமாக கிடைத்தது. விடுபட்ட மண்ணின் ஈரத்திலிருந்து அடுத்து பயிரிடப்பட்ட கொள்ளு நமக்கு உணவாக கிடைக்கின்றது. 2014–15 ம் ஆண்டு விவசாயிகள் ஏக்கருக்கு 300– 350 கிலோ மகசூல் எடுத்துள்ளனர். இதில் 100– 150 கிலோ குடும்ப உணவிற்காகவும் மிதமுள்ள 200 கிலோவை விற்று வருமானம் எடுக்கலாம். இந்த உயிர் தொழில் நுட்ப இயற்கைக்கு உகந்த தொழில் நுட்ப முறையை கையாளுவதால் இரசாயன உரம், மாவு பூச்சிக்கு தேவையான மருந்து போன்றவற்றுக்கான செலவு குறைந்து உற்பத்தி செலவு குறைகிறது.

மண்ணின் உரச்செறிவை கூட்டுவதற்கான முறையை கையாளுவது, குறைந்த இரசாயான உரமிடுதல், மஞ்சள்நிற ஒட்டும் பொறி பயன்படுத்துவது. போன்றவைகள் அதிகளவிலான பூச்சி மருந்து தெளிப்பதை தவிர்க்கின்றது.

இதன் மூலம் சாகுபடி செலவு கடலையில் 24 சதவீதம் கேழ்வரகில் 20 சதமும் சாமையில் 3 சதவீதமும் குறைகின்றது. குறைந்த சாகுபடி செலவின் மூலம் நிகர லாபம் கூடுதலாக கிடைக்கின்றது. கடலை சாகுபடியில் நிகர லாபம் 82 சதமும் கேழ்வரகில் 42 சதமும் சாமையில் 71 சதமும் உயர்ந்துள்ளது.

டி.எம். ராதா
ஏ.எம்.இ. பவுண்டேசன், 204, 100அடி ரிங்ரோடு
பனசங்காரி, 2 வது பிளாக், 3 வது ஸ்டேஜ்
பெங்களூரு– 560085.

## சித்த வைத்தியர்கள் கூட்டம்

17 வது சித்த வைத்தியர்கள் கூட்டம் 17.4.2018 அன்று விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி தாலுகாவிலுள்ள சேவாப்பூர் மூலிகை தோட்ட வளாகத்தில் ஆரம்பமானது. தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த 30 வைத்தியர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தின் நோக்கம் வைத்தியர்கள் தங்களுக்கு தெரிந்த மருத்துவ சிகிச்சை முறைகள் மற்றவர்களுடன் விவாதித்து அவர்களது மருத்துவ முறையை அறிந்து கொள்ள வேண்டும் என்பதே இக்கூட்டதின் நோக்கம் என்று திரு. சுபானந்தன் கூறுகிறார்.

பத்து, படை நீங்க மருத்துவ குறிப்பு பற்றி திரு.பிச்சை, கம்பம் எடுத்து கூறினார். தேவையான பொருட்கள்: நல்லெண்ணெய் – 1 லிட்டர், விளக்கெண்ணெய் – 1 லிட்டர், கடுகு எண்ணெய் – 1 லிட்டர், வேப்பெண்ணெய் – 1 லிட்டர், புங்க எண்ணெய் – 1 லிட்டர், மொத்தம் மேற்கண்ட 5 லிட்டர் எண்ணெயுடன் கீழ்க்கண்ட மூலிகை தூள் செய்து சேர்க்க வேண்டும். கொடிவேலி வேர் – 50 கிராம், மூக்கனாசாரநத்தி வேர் – 50 கிராம், வேலி பருத்தி வேர் – 50 கிராம், நொச்சி வேர் – 50 கிராம், தழுதாளைவேர்– 50 கிராம், ஊமத்தைவேர் – 50 கிராம், எட்டிவேர் – 50 கிராம், கொடி கள்ளி – 50 கிராம், எருக்களம்பூ மொட்டு – 50 கிராம், முருங்கை பட்டை – 50 கிராம், வெள்ளைபூண்டு – 50 கிராம், விளாம்பழம் – 50 கிராம் சேர்க்கப்பட்ட எண்ணெய் கலவையை நன்கு கொதித்து பதத்திற்கு வந்தவுடன் அதனை எடுத்து ஆற வைத்து பயன்படுத்தலாம்.

திரு. சுபானந்தன், குடிபட்டி அவர்களது மருத்துவ குறிப்பு: வண்ணான் அவுரி இலை, பெரியா நங்கை இலை, மூக்கனாங் சரங்கத்திஇலை, சிறு பீழை இலை, ஆடு திண்ணா பாலை இலை, தும்பை இலை, நஞ்சு முறிச்சான் இலை,வேப்பங்கொளுந்து, கொளிஞ்சி மேற்கண்ட இலைகளை காய வைத்து பொடி செய்து சம அளவு கலந்து சூரணமாக சாப்பிட்டு வந்தால் 48 நாளில் குணமடையும் என்றார்.

திரு. ஜெயபிரகாஷ் வடலூர் அவர்களது மருத்துவ முறை: மூட்டு வலி, கைவலி, கால்வலிக்கான இளக்க தைலம் தேவையான பொருட்கள் : எலுமிச்சம்பழ சாறு 1 லிட்டர், எருக்க இலை சாறு – 1 லிட்டர், எட்டிபழ சாறு – 1 லிட்டர், ஆடா தொடை இலை சாறு – 1 லிட்டர், தழுதாழை இலை சாறு – 1 லிட்டர், நொச்சி இலை சாறு – 1 லிட்டர், வேலி பருத்தி இலை சாறு – 1 லிட்டர், முடக்கத்தான் இலை சாறு – 1லிட்டர் இந்த 8 லிட்டர் சாற்றுடன் கீழ்க்கண்ட மூலிகை பொருள்களை சேர்க்கவும். எட்டிக் கொட்டை, தான்றிகா, கடுக்காய், பூண்டு 250 கிராம், அதிமதுரம் ஒவ்வொன்றும் 10 கிராம் பவுடராக சேர்த்து கொள்ள வேண்டும். மேற்கண்ட பொருள்களை 8 லிட்டர் இலை சாற்றுடன் சேர்த்து அடுப்பில் வைத்து சூடேற்ற வேண்டும். மெழுகு பதம் வரும் வரை சூடேற்ற வேண்டும். இந்த தைலம் தேய்ப்பதன் மூலம் மடக்க முடியாத கைகளையும் கால்களையும் மடக்கலாம் என்கிறார்.

திரு. பாலசுப்பிரமணியம் வைத்தியர் அருப்பு கோட்டை கால் ஆணி மறைய மருந்து: விரலி மஞ்சள் – 5 கிராம், வசம்பு – 5 கிராம், மருதாணி இலை – கைப்பிடி அளவு, பூச்சூடம் – 5 கிராம். மேற்கண்ட பொருள்களை அம்மியில் இட்டு அரைத்து வரும் கலவையை ஆணி உள்ள இடத்தில் வைத்து துணியில் கட்டி விடவும். ஒவ்வொரு நாள் இரவிலும் படுக்கைக்கு செல்லும் முன் இவ்வாறு செய்து வந்தால் 11–20 நாள் காலுக்குள் ஆணி மறைந்து விடும் என்கிறார்.

திரு. தர்மராஜன் கோயம்புத்தூர்: சளி, இருமல் நீங்க சுக்கு– 10 கிராம், மிளகு– 10கிராம், திப்பிலி – 10 கிராம், ஏலம் – 10 கிராம், மேற்கண்ட பொருள்களை தனித்தனியை பொடி செய்து வைத்துக் கொண்டு சமபங்கு கலந்து காலை, மாலை நேரங்களில் 1 சிட்டிகை அளவு தண்ணீரில் கலந்தோ அல்லது நேரடியாகவோ சாப்பிட்டு வர சளி, இருமல் நீங்கும் என்கிறார்.

சிறு குழந்தைகளுக்கு முதலில் கலந்து கொடுக்கலாம் என கூறுகிறார்.

### காய்ச்சலுக்கு

புதினா இலை (கைபிடி அளவு) சிறு சீரகம் 50 கிராம், இரண்டையும் சேர்த்து தண்ணீரில் கொதிக்க வைத்து ஆறிய பின் காலை மாலை கலவை நீரை குடித்து வந்தால் காய்ச்சல் போய் விடும்.

பூமா தேவி , கும்பகோணம் : விஷக்கடி குறிப்புக்கு: தேள் கொட்டி விட்டால் முருங்கை கீரையுடன் உப்பை சேர்த்து நன்கு மென்று முழுங்கி விட்டால் தேளின் நஞ்சு முறிந்து விடும்.

**பாம்புகடிக்கு:** தேங்காய் பாலுடன் மிளகை சேர்த்து மென்று தின்றால் பாம்பு விஷம் முறிந்து விடும்.

திரு. சுபானந்தன், குடிபட்டி: திரி கடுக சூரம், சுக்கு, மிளகு, திப்பிலி மூன்றையும் நன்கு சுத்தம் செய்து தனித்தனியே உரலில் இட்டு இடித்து மெல்லிய துணியில் சலித்து வைத்துக் கொள்ள வேண்டும். பின் மூன்றையும் சம பங்கு எடுத்து கலந்து வைத்துக் கொள்ள வேண்டும். சளி, இருமல் காய்ச்சலுக்கான மிக சிறந்த சூரணமாகும்.

**திரி பலா சூரணம்:** கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் மூன்றையும் தனித்தனியே 2–3 நாள் ஊற வைத்து உள்ளிருக்கும் கொட்டையை நீக்கி விட்டு சதைபற்றை கொப்பரையிலிட்டு தண்ணீருக்கு பதிலாக பால் ஊற்றி அவிக்க வேண்டும். நன்றாக அவில்ந்ததும் அதை வெளியில் எடுத்து காய வைத்து பொடி செய்து சூரணமாக சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் நீங்கும். உடல் உஷ்ணம் நீங்கும் என சுபாநந்தன் கூறினார்.

**பஞ்ச தீப சூரணம்**

சுக்கு, மிளகு, திப்பிலி, சீரகம், ஏலக்காய் சமபங்கு எடுத்து சுத்தம் செய்து பொடி செய்து அத்துடன் சம பங்கு பனங்கற்கண்டு சேர்த்து குடித்து வந்தால் சுவாச மண்டலத்தை சீராக்கும். சளி, இருமல், காய்ச்சல் வராது பித்தம் குறையும் என்கிறார்.

தொகுப்பு : ஜெயபாண்டி, சேவா

## வாசகர் வட்டம்

### பெய்யும் மழையின் கணிப்பு

நான் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக மழை பெய்யும் தோராயமான நிலை குறித்து தெரிவித்து வருகிறேன். என்னுடைய கனவில் பெய்யும் மழை பொழிவின் அளவு முன் கூட்டியே கூறப்படுகிறது. இந்த ஆண்டு மழை 60 சதவீதத்திற்க்கும் மேலாக பெய்யும் வாய்ப்புள்ளது. இது சென்ற பல ஆண்டுகளை விட அதிகம். ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படும். அதிக நீர் ஆறுகளில்/ஓடைகளில் சென்று ஊற்று எடுக்கும். இன்னும் சில இடங்களில் புதை குழிகள் ஏற்படும். அதாவது மண்ணும் நீரும் கலந்து அல்லது அடிவரை சகதியாக மாறும். எனவே சகதியாக கிடைக்கும் நீரை அணை, குளங்களில் தேக்கி வைத்து பயன்படுத்துவது அரசின் கையிலும் மக்களின் கையிலும் உள்ளது. இது எனக்கு கிடைத்த செய்தி. உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன். இயற்கை தனது வேலையை ஒழுங்காகச் செய்கிறது. ஆனால் இயற்கை கடவுளின் மறு பிம்பமான மனிதன் வேறு வழியில் சென்று கொண்டிருக்கிறான். தமிழக அரசு தகுந்த தக்க நடவடிக்கை எடுக்குமாறு பணிபன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

எம். பெரியசாமி
அஞ்சலக கண்காணிப்பாளர் (ஓய்வு)
எண் : 289 கிழக்குத் தெரு, மண்மிகு கிராமம்
வடக்கந்தல் – 606207, விழுப்புரம் மாவட்டம்
செல் : 9994215819

### மஞ்சள் காமாலைக்கு

200 மி.லி வெள்ளாட்டு கோமியத்தில் ஒரு எலுமிச்சை பழத்தின் சாற்றை பிழிந்து அதில் ஊற்றி 1 மணி நேரம் கழித்து சாப்பிட வேண்டும். காலை மாலை இரண்டு வேளை, தொடர்ந்து 5 நாள் சாப்பிட வேண்டும். எண்ணெய் பலகாரம் சாப்பிட கூடாது. பின்பு கீழநெல்லி இலையை அரைத்து 1 நெல்லிக்காய் அளவுக்கு சாப்பிட வேண்டும்.

ஆர், பாண்டி, 1/38, வடக்கு தெரு
சங்கரலிங்கபுரம் அஞ்சல், விருதுநகர் மாவட்டம்

### மடிநோய்க்கு வைத்யம்

மாட்டிற்கு மடி நோய் வந்த போது கோவை இலை அரைத்து காலை, மாலை இரண்டு நாட்கள் போட வேண்டும். ஐஸ்கட்டி 4 தடவை மடியில் வைத்து ஒத்தடம் கொடுக்க வேண்டும். இரண்டு மாட்டுக்கு இம்முறையை செய்து பார்த்ததில் குணமாகி விட்டது.

சமுத்திரபாண்டி
த/பெ. முத்தையா, மருளூத்தூர்
விருதுநகர் மாவட்டம்
செல் : 9626836253

### தமிழ் புலமைக்கு கைகொடுத்த தச்சு தொழில்

அரக்கோணம் புளியமங்கலம் ஊரிற் பிறந்த குப்புசாமி என்ற மாணவர் கல்வி பயிலும் சமயம் குடும்ப வருவாய்க்காக தச்சுத் தொழில் பயின்றார். பின்னர் தமிழ் புலமையை வளர்த்துக் கொள்ள இரவு நேர பள்ளியில் சேர்ந்து பயின்றார். வ.உ.சியிடம் திருக்குறள் மாணாக்கராக இருந்த சமயம் மண்ணெண்ணெய் விற்று வ.உ.சிக்கும் உதவினார். தமிழ் வித்வானாகி தமிழாசிரியராய் பணியாற்றி இரவு நேரத்தில் தொழிலாளர்களுக்கு தமிழ் பாடம் நடத்தினார். பின்னர் சொந்த ஊரான அரக்கோணம் பகுதியில் பல கிராமங்களில் இரவு பாடசாலை நடத்தினார்.

வடமாலவன் குன்றத்தை (திருப்பதியை) தமிழ் நாட்டுடன் இணைக்கப்பாடுபட்டு திருத்தனியான வடவேலவன் குன்றத்தை மட்டும் சேர்த்தார். மங்கலங்கிழார் என்ற பெயருடன் கடைசி மூச்சு வரை தமிழ் பற்றுடனிருந்து தனது கொள்கையில் பிறழாமல் வாழ்ந்து காட்டினார். கடைசி மூச்சு வரை தமிழ்பற்றுடனிலிருந்து 1953 ல் உடல் நீந்தார்.

பி.ஏ. சேகர்
குருவராஜ் பேட்டை, அரக்கோணம் தாலுகா
வேலூர் மாவட்டம், செல் : 9176044920

## நெசவில் பாவு போடும் இயந்திரம்



லுங்கி நெசவில் பொறப்பாவு டிசைன் மெஷின் ஐ வேலூர் மாவட்டம், குருவராஜ்பேட்டை சேகர் உருவாக்கியுள்ளார். பவர் லூமில் சங்குமார்க் போன்ற லேபிள் கொண்ட கைலிகள் தயாரிக்கப்படுகின்றன. 19 மீட்டர் நீளம் கொண்ட பாவு முறைதான் இருந்து வந்தது. இவரது மிஷினைப்பயன்படுத்தி 200 மீட்டர்க்கு ஒரு முறை பாவு டிசைன் செய்யலாம். கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக பவர் லூமில் இந்த புரட்சியை யாராலும் செய்ய முடியவில்லை. இந்த மிஷினை லுங்கி தயாரிக்கும் ஒரு கம்பெனிக்கு காப்பியடித்துவிடாத நிபந்தனையின் பேரில் விநியோகித்துள்ளார்.

இதே போல் பட்டு சேலைக்கும் எல்லா டிசைன்களிலும் பாவு போடும் மிஷினை உருவாக்கி ஆந்திரா மாநிலத்தில் விநியோகித்துள்ளார். சேலைக்கு பாவு போடும் மிஷனானது ரூ. 1,.20,000 க்கு கொடுத்துள்ளார். இது 1/2 ஹெச்பி மோட்டாரால் இயங்கக் கூடியது. இந்த மிஷினால் 4 பேர் செய்யும் வேலையை 1 நபரே செய்து முடிக்கலாம். சாதாரண கையால் செய்யப்படும் பாவின் நீளம் 24 மீட்டர். ஆனால் மிஷின் பாவில் 120 மீட்டர் வரை செய்யலாம். மூன்று பாவு ஓடும் இடத்தில் 12 பாவு ஓட்டலாம். ஒரு பாவு மூலம் 20 தறிகள் இயக்கலாம். இந்த பாவு மிஷின் மூலம் லுங்கி, வேஷ்டி, சேலை, சுடிதார், துண்டு போன்றவை நெய்யலாம்.

பி.ஏ. சேகர்
குருவராஜ் பேட்டை, அரக்கோணம் தாலுகா
வேலூர் மாவட்டம், செல் : 9176044920

### ஆவிற்கும் வேண்டும் அன்பு

எங்கள் ஆரோ பழத்தோட்டத்தில் கலப்பினப் பசு ஒன்றை பராமரித்து வந்தோம். இப்பசு 7 லிட்டர் வரை பால் கொடுக்கும். இப்பசுவை பராமரித்து வந்த பணியாளர் அடிக்கடி மாட்டை அடித்து விடுவார். இதன் நிலமையைப்பார்த்து இந்த பசுவை சின்னகாலாபேட் அனாதை ஆசிரமத்தில் ஒப்படைத்தோம். அங்குள்ள அனாதைப்பிள்ளைகள் அந்த பசுவை நன்கு பராமரித்தனர். அதற்கு இசையையும் கேட்டு களிக்க பாடுவார்கள். அந்த மாடு சந்தோஷத்துடன் இருப்பதினால் 13 லிட்டர் பால் கறக்கிறது.

எங்கள் பண்ணையில் பழத்தோட்ட மரங்கள் போட்டுள்ளோம். நித்தமும் காலை, மாலை சூரியன் உதய காலத்திலும் அஸ்தமான காலத்திலும் அக்னி ஹோத்திரம் செய்து வருவதால் இங்கு நல்ல அமைதி சூழல் உருவாக்கியுள்ளோம். அக்னி ஹோத்திரம் செய்யும் முறை நம் வழி வேளாண்மை பருவம் 7இதழ் 2 (ஜுலை–செப்டம்பர் 1998) ல் கொடுக்கப்பட்டுள்ளது.

ஜாஸ்மின்
ஆரோ ஆர்ச்சாட், ஆரோவில்
பாண்டிச்சேரி
செல் : 9787797814

### புழு வெட்டுக்கு

எனக்கு 4 மாதங்களாக தலையில் புழு வெட்டு இருந்து வந்தது. இதனால் முடி சரியாக வளர்வது இல்லை. இதற்கு பேய்க்குமட்டி காயை அறுத்து 4 நாட்கள் பூசி வந்தேன். இதன் பின்னர் புழு வெட்டு மறைந்துவிட்டது.

திரு. கனகவேல்
த/பெ. பி. முருகன்
கருப்பம்பட்டி
பாவானி வழி
விருதுநகர் மாவட்டம்
செல் : 9787131660

**வேளாண்மையை பகுதி நேர லாபகர தொழிலாக மாற்றுதல்**

சித்திரைப் பட்டத்தில் 2 ஏக்கர் நிலம் ஒத்திகைக்கு (ரூ. 2000 க்கு) வாங்கி ரூ. 200க்கு 2 கிலோ எள் விதை வாங்கி தெளித்தால் 3 மாதங்களில் முதலாளி மற்றும் கூலி ஆள் இருவர் (1+1) மட்டும் ரூ. 500 கொடுத்து கை டிராக்டர் உழவு செய்து தண்ணீர் பாய்ச்சி தெளித்தால் எள் சுமார் 2 முதல் 3 மூட்டை எள் சர்வ சாதரணமாக கிடைக்கும். ஒரு மூட்டை எள் ரூ. 7000/– செலவு போக ரூ. 15,000 முதல் 18,000 வரை 3 மாதத்தில் கிடைக்கும்.

எரு, ஆட்டு புழுக்கை மட்டும் 2 மூட்டை நன்கு அரைத்து தெளித்து விட்டு வேப்பம் புண்ணாக்கு மேலாக தூவினால் மகசூல் சிறப்பாக இருக்கும்.

காலையில் எழுந்ததும் வயலுக்கு ஒரு முறை சென்று பார்த்து விட்டு வந்தால் போது பிறகு நமது அன்றாட வேலைகள் பார்க்கலாம்.

நா. தனசேகரன்
2/41 அக்ரஹாரம்
சூலமங்கலம், பசுபதிகோவில் அஞ்சல்
தஞ்சாவூர் மாவட்டம், செல் : 9715109946

**புனித சைவம் கொள்ளுவோம்**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி
சத்து நிறைந்த பாலையே தந்து காக்கும் ஆட்டினை
கத்தக் கத்த அறுத்து நாமும்
களித்துத்தின்னால் ஆகுமோ?
கூவி நம்மை எழுப்பிடும் கோழி நல்ல பறவையாம்
ஆவிபோக அதனை நாமும்
அறுத்துத் தின்னல் ஆகுமோ?
தாகம் நீக்கும் நீரிலே தங்கி
நிற்கும் அழுக்கினை போக்கடிக்கும்
மீன்களைப் பிடித்து தின்னால் ஆகுமோ?
சாதுவான உயிர்களையே சாகடித்துத் தின்பதோ
போதும் போதும் பாவம் என்றே
புனித சைவம் கொள்ளுவோம்.

## விதை

விதை முதலில் வந்ததா பயிர் முதல் வந்ததா. இந்த கேள்விக்கு பதில் கிடைக்குமா. விதையைப் பார்த்தால் உள்ளே என்ன இருக்கிறது. விதைக்குள்ளே செல்கள் உள்ளன. செல்களுக்குள் குரோமசோம்ஸ் உள்ளன. குரோமசோமஸில் ஜீன்கள் உள்ளன. ஜீன்கள் பயிரின் உயரம், நிறம், பூக்களின் அமைப்பு போன்ற குணாதிசயங்களை நிர்ணயக்கும். விதையை நிலத்தில் போட்டால் முளைக்கும். முளைக்க மண் வேண்டும். நீர் வேண்டும். நீர் மேகத்திலிருந்து வருகிறது. மேகம் கடல்நீர் ஆவியாவதால் வருகிறது. கடல்நீர் ஆவியாவது சூரியனாலே . எனவே சூரியன் தான் முதல் மூலம். விதை ஒரு பரிமானம் செய்யும் சக்தியை உள்ளடக்கியுள்ளது (Creative Fore). இந்த விதையை விதைக்கும் சமயம் சிலர் விதைத்தால் நன்கு முளைக்கும். சிலர் கைபட்டால் முளைப்பு குறைவாக இருக்கும். இதற்கு கூட ஒவ்வொருவரின் குணம் அதற்கேற்றாற்போல் அவரது உடம்பு விசை மாறுகிறது என நம்பலாம். இதனை அனுபவத்தில் பார்க்கலாம். விதைக்கும் காலமும் பயிரின் வளர்ச்சியை கூட்ட அல்லது மாற்ற உதவும்.

பெர்ணாண்டஸ், ஆரோவில்

(28.7.2018 அன்று பாரம்பரிய விதை திருவிழா துவக்க உரையில் பேசியது . இடம் ஆரோவில், பாண்டிச்சேரி)

**மலைவேம்பு**

நன்கு வளர்ந்த மலைவேம்பு மரக்கன்றுகள் ரூ. 12/– க்கு தருகிறோம்.

K.தேவராஜ்
கோயம்புத்தூர் அக்ரோ பாரஸ்டிரி பார்ம் புரொடியூசர் கம்பெனி,
19/1 முதல்மாடி
ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி நகர்
கோவை–641014
செல். 9843484463

**2017 அப்துல்கலாம் இக்னைட் பரிசு வாங்கிய மாணவர்கள்**

ஒவ்வோர் ஆண்டும் அப்துல்கலாம் பிறந்நாள் நினைவாக இக்னைட் பரிசானது புது யோசனைகள் அல்லது கண்டுபிடிப்புகளை உருவாக்கும் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. 2017 வது வருடத்ல் 65,000 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. இதில் சிறந்த மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இந்த போட்டியை தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளை (National Innovation Foundation, Ahmedabad) நடத்தி வருகிறது. 2018 ம் ஆட்டிற்கு யோசனைகள் கண்டுபிடிப்புகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 31.8.2018.

National Innovation Foundation-India
Grambharti, Amrapur, Gandhinagar-Mahudi Road, Gandhinagar, Gujarat - 382650
Tel: 02764261131/32/38
Email: ignite@nifindia.org.in-ignite

இக்னைட் 2017 போட்டியில் பரிசு பெற்ற மாணவர்களின் கண்டுபிடிப்புகள் பின்வருமாறு:

**1) சூரிய ஒளியில் இயங்கும் நெல்வயல் தொழி உழவு கருவி**



சிவசூரியா என்ற 11வது வடிக்கும் மாணவன் ( வேலம்மாள் மெட்ரிகுலேசன் மேல்நிலைள்ளி, சென்னை) சூரிய ஒளியில் இயங்கும் நெல் வயலில் உழுது சமப்படுத்தும் கருவி முன்மாதிரியை உருவாக்கியுள்ளார். இதை டிராக்டரில் இணைத்து செயல்படுத்தலாம்.

**2) முட்டை இட்ட நாள் குறிக்கும் அச்சு**



சுபானி என்ற ஒன்பதாவது படிக்கம் மாணவன் ( ஸ்ரீ சைத்ன்யா இன்டர் மீடியட் பள்ளி, குண்டூர்) முட்டைக்கு மேல்புறம் சிறு உறையில் முட்டை இடப்பட்ட நாளை அச்சு பதித்தால் வாங்குபவர்கள் முட்டையின் வயதை தெரிந்து ( புதிதான முட்டையா என்று) கொள்வார்கள்.

**3) சாலையில் வேகத்தடை உள்ளதைத் தெரிந்து கொள்ளுதல்**



இக்ரார் என்ற 11வது படிக்கும் மாணவன் ( அரசு மேல்நிலைப்பள்ளி, புத்தகம், ஜம்மு, காஷ்மீர்) மின்னனு கருவி மூலம் சாலையில் சில மீட்டர்கள் வரும் முன்னரே வேகத்தடை உள்ளதைத் தெரிந்து கொள்ளும் முறையைக் கூறியிருக்கிறார்,

**4) பார்வையற்றோர் பஸ்ஸில் ஏற உதவும் கருவி**



அங்கிட் என்ற 7வது வகுப்பு படிக்கும் மாணவன் ( சிசுஹ மோன்ட்டேஸோரி உயர்நிலைப்பள்ளி, பெங்களூரு) பார்வையற்றோர் மின்னனு கருவியை கொண்டு சென்றால் அது பஸ்ஸில் ஏற உதவும்.

**5) மரசட்டங்களை அறுத்து பாலீஸ் செய்யும் கருவி**



சமீர் என்ற 6வது வகுப் ப மாணவி (பவான் பப்ளிக் ஸ்கூல், பந்தாரா, மஹாராஷ்ரா) இருவரும் ஒரு மேஜை தயார் செய்துள்ளனா. அதில் மரங்களில் பட்டையை அகற்றும் சமயம் விபத்து நேராவண்ணம் ஆட்டேமெட்டிக் பட்டை நீக்கி பாலீஸ் செய்யும் கருவியை உருவாக்கியுள்ளனர்.

**6) கம்ப்ரெஸ்ஸர் மூலம் இயங்கும் சைக்கிள்**




தேஜஸ்வானி என்ற 9வது வகுப்பு படிக்கும் மாணவி (சரஸ்வதி சிசு வித்யா மந்திர் சுந்தர்கர், ஒடிஸா) கம்ப்ரெஸ்ஸர் காற்று மூலம் இயங்கும் சைக்கிளை உருவாக்கியுள்ளார்.

**7) ஸ்கூல் பேக் ஐ எளிதில் சுமந்து செல்லும் சக்கரகால்**



சஹில், நசருதீன், அர்னாம் என்ற 8வது வகுப்பு மாணவர்கள் ( ஜவஹர் நவோதயா வித்யாலயா முரிசிதாபாத், மேற்குவங்காளம்) ஸ்கூல் பேக் ஐ பள்ளி செல்லும் சமயம் ஸ்கூல் பேக் ஐ எளிதில் சுமந்து செல்ல சக்கரகால் வைத்து உருவாக்கியுள்ளனர்.

**8) வாஸிங்மெசின் சோப்புத்தண்ணீர் மறுசுழற்சி**



அயுஸ்மன் என்ற 3வது வகுப்பு படிக்கும் மாணவன் (KIIT இன்டர்நேஷனல் பள்ளி, குர்தா, ஒடிஸா) வாஸிங்மெசின் புதிய வடிவமைப்பை ஏற்படுத்தி பயன்படுத்தப்பட்ட சோப்பு நீரை மீண்டும் உபயோகப்படுத்துகிறார்.

**9) இரும்பு துளைபோடும் கருவியில் இடுப்பு**



துகள்களை பத்திரமாக சேகரிக்கும் விதம் குஸி என்ற 5 வது வகுப்பு படிக்கும் மாணவன் (சாரதா ஆரம்பப்பள்ளி, சபர்கந்தா, குஜராத்) இரும்பு சட்டத்தில் துளைபோடும் சமயம் உண்டாகும் தூள்களை காந்த அமைப்பு மூலம் சேகரிக்கும் கருவியை துளைபோடும் டிரல்லரில் இணைத்துள்ளார்.

## நம்வழி வேளாண்மைக்கு சந்தா விவரம்;

| | வருட சந்தா ரூபாய் | ஆயுள் சந்தா ரூபாய்; |
|---|---|---|
| நூலகங்கள் / நிறுவனங்கள் / கல்லூரிகள்/ கம்பெனிகள் | 200 | 2000 |
| விவசாயிகள் / தனிநபர்கள் | 150 | 1500 |
| தனிப்பிரதி | 30 | ---- |
| 15 வருட பிரதிகளின் தொகுப்பு (பைண்டிங் செய்தது ரூ. 1250) + ( கொரியர் செலவு ரூ. 250 ) | 1500 | ---- |

சந்தா தொகை மணியார்டர் அல்லது பாங்க் டிராப் மூலம் "சேவா"
மதுரை என்ற பெயரில் எடுத்துக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

வங்கியின் பெயர் –யூனியன் பேங்க் ஆப் இந்தியா
மதுரை – கோச்சடைகிளை
SB A/C No – 493902010004241
IFSC Code : UBIN0549398

சேவா
45, டி.பி.எம் நகர், விராட்டிபத்து
மதுரை – 625016
தொலைபேசி : 0452–2380082 , 2380943

நூல் அஞ்சல்

பெறுநர்

------------------------------------
------------------------------------
------------------------------------
------------------------------------

Printed by A. Palaniappan at
Vivekananda Press
G-4, Industrial Estate, Madurai - 7

Published and Edited by
P. Vivekanandan on behalf of
SEVA
45. T.P.M. Nagar
Virattipathu
Madurai - 625 016
(0452) 2380 082, 2380943
Email : vivekseva@gmail.com